விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 17 வெள்ளிக்கிழமை (31.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கச்சதீவுக்கு அருகில் இலங்கை போர்க் கப்பல்கள்

## தாக்குதல் அச்சத்தில் தமிழக கடற்றொழிலாளர்கள்

கச்சதீவுக்கு அருகே இலங்கைப் போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழக மீனவர்கள் முறையிட்டுள்ளனர். மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்துவார்கள் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பிரதமர் இன்று இலங்கை வருகை



தாய்லாந்து பிரதமர் இங்க்லக் சினவத்ரா இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு இன்று 31ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இன்று காலை இலங்கையை வந் தடையும் தாய்லாந்து பிரதமர், முற் பகல் 11 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையி லான நட்புறவு (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத் எம்.பி காலமானார்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சரும், மூத்த அரசியல்வாதியுமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 60.

நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்த அவர் சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்த சமயம் அங்கு மரணமானதாக ஐ.தே.க.வட்டாரங்கள் தெரிவித்தன.

இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த டாக்டர் (19ஆம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்பு வழக்கு பிரதிவாதிகளுக்கு அழைப்பு

வடக்கில் மக்களுக்கு சொந்த மான ஆறாயிரத்து 381 ஏக்கர் காணி அரசாங்கத்தால் சுவீகரிக் கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு மனுக்களின் பிரதிவாதி களை யூலை 10 ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு நேற்று அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதிக்கு ஒப்பான இந்த காணியை அரசாங்கம் சுவீகரிக்க முயல்வதாக தெரிவித்து இரண் டாயிரத்து 176 பேர் இந்த 2 மனுக் களையும் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த இரண்டு மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் எஸ்.சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்களில் யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென் னக்கோன், யாழ்மாவட்ட நில அளவை யாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுத் தேவைக்கு எனத் தெரி வித்து கைப்பற்றப்படவுள்ள இந்தக் காணிகளில் பூர்வீகமாக தாம் வசி த்து வந்ததாகவும் இவற்றை அரசா ங்கம் சுவீகரிக்கும் பட்சத்தில் தாம் நிர்க்கதிக்குள்ளாவதாகவும் மனு தாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வலிகாமம் வடக்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட பகுதிகளிலுள்ள காணி களை (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத் இடத்துக்கு அஜித் நியமனம்

சிங்கப்பூரில் உயிரிழந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜய வர்த்தனவின் பாராளுமன்ற உறுப் பினர் வெற்றிடத்திற்கு அஜித் மன்னப் பெரும நியமிக்கப்படவுள்ளார்.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல் முடிபுகளின் அடிப் படையில் அஜித் மன்னப்பெரும, டாக்டர்ஜயலத்ஜயவர்தனவுக்கு அடுத தபடியாக (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்.புலனாய்வு பணிப்பாளர் நேற்று வன்னிக்கு விஜயம்

இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண் டுள்ள இந்திய இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் லெப்டினனட் ஜெனரல் ஆர்.என்.சிங் உள்ளிட்ட குழுவினர், நேற்று வியாழக்கிழமை வன்னி படைத்தலைமையகத்துக்கு விஜ யம் செய்தனர்.

வவுனியா விமானப்படைத் தளத்துக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் வந்தடைந்த இக்குழுவி னரை இலங்கை இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா வர வேற்றார்.

இதனையடுத்து இந்திய இரா ணுவ (19ஆம் பக்கம் பார்க்க)

## நேர்த்திக்கடன் முடிக்க வந்த லண்டன் பிரஜை கைது!

### வற்றாப்பளையில் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் திங்களன்று நடைபெற்ற வற்றாப் பளை கண்ணகை அம்மன் ஆல யத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்து வதற்காக லண்டனில் இருந்து வருகை தந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டி ருப்பதாக அவரது உறவினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

வற்றாப்பளையில் உள்ள தனது பெற்றாருடைய வீட்டில் இருந்த போது, வெளிநாட்டில் இருந்து வந்த வர்கள் இருக்கின்றார்களா என வீட்டிற்கு வந்து இருவர் முதலில் விசாரித்துவிட்டுச் சென்றதாகவும் பின்னர் மாலையில் வீட்டிற்கு வந்த 6 பேர் அவரைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும் தெரிவிக கப்பட்டுள்ளது.

தாங்கள் பயங்கரவாதப் புல னாய்வு பிரிவில் இருந்து வந்துள் ளதாகத் தெரிவித்த அவர்கள் காலையில் வவுனியாவில் உள்ள தமது- அலுவலகத்தில் வந்து சந் திக்கும்படி கூறியதற்கமைய நேற்றுக் காலை வவுனியாவுக்குச் சென்ற போது, (19ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்டம் இன்னமும் தொடர்கிறது

### மாவை எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களாகிய நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க நீண்ட ஒரு விடுதலைப் போராட்டத்தினை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டு தான் இருக்கின்றோம்.

இப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் ஆயுதம் தாங்கிய போராட்டமாக காணப்பட்டது எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா,

இராணுத்தினர் ஆக்கிரமித்துள்ள தமிழ் மக்களுடைய காணிகளை விட்டு வெளியேறி மீள்குடியேற்றத் திற்கு வழிவிட வேண்டும் என்று



நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத் துகின்றோம் (19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தேர்தல் மூலம் பிரிவினைவாதம் ஏற்படும்

### பியசிறி தெரிவிப்பு

காணி மற்றும் பொலிஸ் அதிகா ரங்களுக்கு எதிராக ஜே.என்.பி கட்சி போராட்டமொன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 3ம் திகதி கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளது.

வடக்கில் தேர்தல்களை நடத் துவதன் மூலம் நாட்டில் பிரிவினை வாதமே ஏற்படும் என ஜே.என்.பி கட்சியின் உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

களனியில் இந்த கையொப் பங் களைத் திரட்டும் போராட்டம் நடத் தப்படவுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் கையெப்ப ங்கள் திரட்டப்பட்டு, ஜனாதிபதி செய லகத்தில் ஒப்படைக்கப்பட உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 13-ம் திருத்தச் சட்டம் தொடர்பில் வெகுஜன வாக்கெடு ப்பு நடத்தப்பட வேண்டுமென கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச கோரியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பொலிஸாரினால் விடுதி ஒன்று முற்றுகை

## இரண்டு ஜோடிகள் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டு அங்கிருந்த இரண்டு ஜோடிகள் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பகுதியில் உள்ள தனியார் விடுதியில் தவறான நடத்தையில் ஈடுபட்ட இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் கைது செய்யப்பட்டு யாழ்.சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகர சபை தலைவர் தேகசகாயம் பிள்ளை, நகர சபை உறுப்பினர் கிசோர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவக இளைஞர் அணித் தலைவர் நிசாந்தன் ஆகியோர் இந்த விடுதியை முற்றுகையிட்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த விடுதியில் நடைபெற்ற விபச்சார நடவடிக்கை முற்றுகையிடப்பட்டுள்ளது.

இந்த விடுதியை பொலிஸார் முற்றுகையிட்டதுடன், விடுதி உரிமையாளருக்கும் பொலிஸாருக்கும் கடும் வாக்குவாதம் நடைபெற்றுள்ளது.

இதனை அடுத்து இந்த விடுதியில் இருந்த இரண்டு ஜோடிகளை பொலிஸ் தங்கள் வாகனத்தில் கொண்டு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-11)

### இலங்கை வீரர்கள் பங்கேற்பு

# சென்னையில் நடைபெறவிருந்த போட்டிகள் புனேக்கு மாற்றம்

ஆசிய தடகளப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்பதால் சென்னை நகரில் நடைபெறவிருந்த போட்டிகள் அனைத்தும் புனே நகருக்கு மாற்றப்பட்டுள்ளதாக இந்திய தடகள கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் படுகொலை செய்த சம்பவம் கடந்த பெப்ரவரியில் தமிழகத்தை உலுக்கியது.

அப்போது ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்த இலங்கையின் வீரர்கள் பங்கேற்றால் சென்னையில் ஆசிய தடகளப் போட்டியை தமிழக அரசு நடத்தாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

இந்நிலையில் டில்லியில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய தடகளக் கூட்டமைப்பின் தலைவர் அடில் சுமரிவாலா, ஆசிய தடகளப் போட்டிகள் சென்னை நகரிலிருந்து புனே நகருக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எதிர்வரும் ஜூலை 3-ந் திகதி முதல் 7-ந் திகதி வரை புனே நகரில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# வகுப்பு மாறி பயணித்த 110 பேர் கைது

ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணிப்பதற்கான பயணச்சீட்டை பெற்றுக்கொண்டு இரண்டாம் வகுப்பில் பயணித்த 110 பேரை கைது செய்துள்ளதாக ரயில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டைக்கும் பொல்காவலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் கடுகதி ரயிலில் வகுப்பு மாறி பயணித்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 43 பேரிடமிருந்து தண்டமாக ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 100 ரூபாயை அறிவிட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏனையோர் தண்டப்பணத்தை செலுத்துவதாக உறுதியளித்ததையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். தண்டமாக ஒருவரிடமிருந்து 2500 ரூபாயும் பயணக் கட்டணத்தில் இரு மடங்கு கட்டணமும் அறிவிடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-11)

# 13 ஆவது திருத்தத்தை எதிர்ப்பது இலங்கை-இந்திய உறவை பாதிக்கும்

## புளொட் தலைவர் தெரிவிப்பு

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பிரகாரமே 13-வது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே இதனை ஒழிப்பதென்பது இரு நாடுகளுக்கிடையிலான ராஜதந்திர உறவுகளை வேரறுக்கும் செயற்பாடாகும் என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டார்கள் என்றே நம்புகிறோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்துக்கு வந்த உறுப்பினராலும் தனிநபர் பிரேரணையொன்றைக் கொண்டு வரமுடியும். அதனை எவராலும் தடுக்க முடியாது. அத்துடன் தனிநபர் பிரேரணையென்பது பாரிய வலுவான தொன்றல்ல. 13-வது திருத்தம் என்பது இலங்கை - இந்தியா என்ற இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவுகளுக்கமைய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

எனவே இதனை ஒழிப்பதென்பது இரு நாட்டு உறவுகளையும் பாதிக்கும். அதுமட்டுமல்லாது இதனை ஒழிப்பதற்காக பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் கிடைக்கப் போவதில்லை.

அரசாங்கத்தோடு இணைந்திருக்கும் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர இவர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களான டிலான் பெரேரா, ராஜித சேனாரத்ன போன்றவர்களும் இதற்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள் என்பது அவர்களின் கடந்த கால கூற்றுக்களில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

தமக்கு ஒரு நியாயமான தீர்வாக அதிகார பரவலாக்கலையே தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஹெல உறுமயவின் தவிசாளரும், அதன் பாராளுமன்ற குழுத் தலைவருமான அத்துரலிய ரத்னதேரர் அரசியல் யாப்பின் 13-வது திருத்தத்தை ரத்துச் செய்யும் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலம் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வினை வழங்கத் தயாரில்லை என்பதையே காட்டுகின்றது.

நிச்சயமாக இந்த நாட்டிலே இன வாதத்தைத் தூண்டும் ஒரு செயலாகவே இது பார்க்கப்படுகின்றது. இத்தனிநபர் பிரேரணை ஒரு போதும் வெற்றியடையப் போவதில்லை என புளொட் தலைவர் சித்தார்த்தன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)






# மின் கம்பம் விழுந்து மாணவி பலியானார்

மின்கம்பம் முறிந்து விழுந்ததில் 16 வயது பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கம்பளை, குருந்துவத்த என்ற இடத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

லொறி ஒன்று மின் கம்பத்தில் மோதியதில் மின் கம்பம் முறிந்து அருகில் உள்ள முச்சக்கரவண்டியின் மீது விழுந்ததில் முச்சக்கரவண்டியில் இருந்த மாணவி பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது அருகிலிருந்த ஆசிரியை ஒருவரும் மற்றுமொரு மாணவியும் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/- சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக் கூடியவாறு துரித சேவை ...

கட்டணங்கள் (1 Kg) இற்கு
லண்டன் 1450 /-
கனடா 2550 /-



விசேட கட்டணங்கள் (5 Kg) இற்கு
சுவிஸ் 7800 /-
அவுஸ்திரேலியா 5500 /-
ஜேர்மனி 5500 /-
சாதாரண சேவை 1 Kg இற்கு கனடா 700 /- Uk 600 /-
(பொதிகள் நிறை 5 Kg இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

(c-3464)

குறிப்பு : கருவாடு, மருந்து வகை, எண்ணை வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு : வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோருக்கும் வெள்ளவத்தையில் மூன்று அறைகள் இணைந்த குளியலறை A/c, Non A/c அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : Rainbow Travels 30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. : 021 221 9596, 077 87 10 732


# பிள்ளையாருக்கு அருகில் புத்தர்சிலை வைக்கத் தடை

(கொழும்பு)

மட்டக்களப்புநகரின் வடக்குநுழைவாயிலில் பிள்ளையாரடி சந்தியில் புத்தர் சிலை நிர்மாணிப்பதற்கு நீதிமன்றத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் சிலை வைப்பதற்கு மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியின் வேண்டுகோளின் பேரில் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உள்ளூர் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, இதற்கான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும் கோரினார்கள்.

குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக பொலிஸார் மட்டக்களப்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறித்த இடத்தில் புத்தர் சிலை வைப்பது பொதுத் தொல்லை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டு அதற்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரினர்.

பொலிஸாரின் அறிக்கையை ஏற்றுக் கொண்ட மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ், சிலை வைப்பதற்கு தடை உத்தரவை பிறப்பித்ததோடு அதற்கான வேலைகளையும் நிறுத்துமாறு தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## பட்டதாரிகளிற்கான மாநாடு





யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கயன் இராமநாதன் தலைமையில் யாழ்.மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் பட்டதாரி பயிலுனர்கள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக திரு.அங்கயனின் ஏற்பாட்டில் யாழ்.மண்ணில் கௌரவ நாமல் ராஜபக்ஷ தலைமையில் பட்டதாரிகளிற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் தாங்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கயன் இராமநாதன்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி,
யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்.

(ச-3468)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சாமர்த்தியம்

யாரையும் ஏமாற்றவும் கூடாது; ஏமாந்து போகவும் கூடாது; இதற்கு மிகவும் சாமர்த்தியம் அவசியம்.

ஒரு ஊரிலே பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலே வீணை வாசிப்பதிலே மிகவும் கெட்டிக்காரன்.

அவரது வீணை வாசிப்பை கேட்டு விட்டு ஒரு மகாராஜா என்ன செய்தார் தெரியுமா? ஆள் உயரத்துக்கு ஒரு வீணையை தயார் செய்து அதை அவருக்கு பரிசாகக் கொடுத்தார்.

அதன்பின் அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த வீணையைத் தன்னுடன் எடுத்துச் சென்று கச்சேரிகளில் வாசிப்பார். அவர் வீணை வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறலாம்.

அதேபோல் கடம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர் ஒருவர் இருந்தார். அவர் காலத்திலே கடம் வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறினார்கள்.

இருவரும் ஒரே நேரத்தில் கச்சேரி நடத்துவதில்லை. இவர்கள் இருவரையும் எப்படியாவது ஒரே மேடையில் வாசிக்க வைக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினர்.

இரு துருவங்களை எப்படி ஒன்றிணைக்க முடியும்?

ஒரு கிராமத்தில் கௌரவத்திற்கு ஆசைப்பட்ட பண்ணையார் இருந்தார். அவர் வீட்டிலே ஒரு கல்யாணம். அக் கல்யாணம் அவரது மகளுக்காகும்.

இந்தக் கல்யாண கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரு வித்துவான்களையும் கொண்டு வந்து கச்சேரியில் அமர்த்த வேண்டும் என நினைத்தார்.

ஆனால், இவர் வருகிறார் என்றால் அவர் வரமாட்டார். அவர் வருகிறார் என்றால் இவர் வரமாட்டார். என்ன செய்வதென யோசித்தார்.

"சரி இருவரும் வரும் விடயத்தை ஒருவருக்கொருவர் கூறாது, பொய் சொல்லி அழைத்துக் கொள்வோம்.

கச்சேரி ஆரம்பமாகும் சமயத்தில் இருவரையும் மேடையில் அமர வைத்து விடுவோம். எல்லோர் முன்னிலையிலும் அவர்கள் சண்டை பிடிக்கமாட்டார்கள் என்றொரு முடிவுக்கு வந்தார். கூறியபடி ஏற்பாடுகளும் முடிவு பெற்றன.

இருவரும் தனித்தனியாக அழைத்து வரப்பட்டு வெவ்வேறு வீடுகளிலே தங்க வைக்கப்பட்டனர்.

அன்று மாலை இசைக்கச்சேரி நடைபெற இருந்தது.

ஆனால், இருவரும் அழைத்து வரப்பட்ட சிறிது நேரத்தில் இவரது திருகுதாளம் சாதுவாகத் தெரிய வரத்தொடங்கியது.

ஊரிலே இதற்கென சிலபேர் இருப்பார்கள்... ஒருவருக்கொருவர் பற்ற வைப்பதற்காக...

வீணை வித்துவான் கட வித்துவானை எப்படி "கட்" செய்யலாமென யோசித்துப் பார்த்தார்.

உடனே பண்ணையாரை அழைத்து... "இதோ பார்! அந்த 'கட' வித்துவானோடு நான் வாசிப்பதற்கு எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களுக்கு சொல்ல வேண்டியது எனது கடமை.

அவர் எத்தனை "கடம்" கொண்டு வந்துள்ளார் என்பதை கவனித்தீர்களா?" என்று கேட்டார்.

மரக்கறி

"கவனித்தேன்! இரண்டு கொண்டு வந்திருக்கிறார்" என்றான்.

"அது எதற்கென்றால், ஒரு கடம் உடைந்தால், மற்றதை உபயோகப்படுத்துவதற்கு... ஒரு சுபகாரியத்திலே மேடையிலே பானை உடைந்தால் அது நல்ல சகுனமா? யோசித்து பாருங்கள்" என்றார்.

நீங்கள் கூறுவது நியாயம்தான். ஆதலால், தருவதாக பேசிய பணத்தைக் கொடுத்துத் திருப்பினார்.

உடனே கடவித்துவான் இந்தப் பண்ணையாரைப் பார்த்து "நீங்கள் சொல்வது சரி... இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது எனது கடமை" என்றார்.

என்னவென அவர் வினவினார்.

"அந்த வீணை வித்துவானின் வீணை ஆள் உயரம் வரை உள்ளது. அதை அவர் மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத்துணி போர்த்தி முன்பக்கம் இருவரும் பின்பக்கம் இருவரு மாக மொத்தம் நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார் கள். அது பார்ப்பதற்கு பாடையைத் தூக்கும் ஞாபகம் வரும்.

"சுபமுகூர்த்தம் நடக்கும் வேளையிலே இது தேவைதானா- நன்றாக யோசித்துப் பாருங்கள்" என்று கடவித்துவான் கூறினான்.

இதைக்கேட்ட பண்ணையார் சற்று யோசித்தார்.

"என் வீட்டுக் கல்யாணத்துக்கு கச்சேரியே வேண்டாம்" என்று கூறிவிட்டு அவரையும் கணக்கு தீர்த்து அனுப்பி விட்டார்.

இந்த மூன்று பேரில் யார் கெட்டிக்காரன் என்று நினைக்கிறீர்கள்? ஒன்றுக்கொன்று சளைத்ததில்லையே...

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் கைதானவர் நிரபராதி என விடுதலை

(யாழ்ப்பாணம்)

நபரொருவரின் தலையை வெட்டி கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டில் கைதானவரை நிரபராதி என கண்டு யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இளவாலை பெரிவிளானைச் சேர்ந்த சுப்பையா தர்மலிங்கம் என்பவர் இனந் தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலை தொடர்பான சந்தேகத்தின் பேரில் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி விஜயகுமார் என்பவரும் சுரேஸ் என்பவரும் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் யாழ். மேல்நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் இடம்பெற்ற போது 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி யூரி சபையின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கில் சாட்சியம் அளித்த நபர்களில் ஒருவர், தான் தர்மலிங்கம் கொலை செய்யப்பட்டதையும் அவரின் வாகனம் தீ வைக்கப்பட்டதையும் நேரில் பார்க்கவில்லை என்றார்.

கிருஸ்ணபிள்ளை மயூரன் என்பவர் சாட்சியம் அளிக்கையில், தனது தங்கைக்கு திருமணம் நடந்த மறுநாளே கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.குடும்பத்திக்குள் காணப்பட்ட திருமண பிரச்சினை கார ணமாகவே குறித்த கொலை எதிரியினால் நிகழ்த்தப்பட்டுள்ளது என் றார்.

மேலும் கொலையுண்ட நபரின் சகோதரர் ஒருவரும் மன்றில் சாட்சியமளித்திருந்தார்.

இதன்பின்னர் கடந்த மாதம் 4 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் இடம் பெற்ற குறித்த வழக்கின் குறுக்கு விசாரணையின் போது சந்தேகநபர் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி சிவநேசன், சந்தேகங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை குற்றவாளியாக காண முடியாது என தனது வாதத்தை முன் வைத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த ஆணையாளர், வழக்கில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் நியாயமான சந்தேகங்களுக்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதனாலும் குறித்த எதிரியின்மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கப்பால் நிரூபிக்கப்பட முடியாது எனவும் மன்று முடிவுக்கு வருகின்றது.

எனவே குற்றம் சுமத்தப்பட்ட எதிரியை நிரபராதி என கண்டு மன்று விடுதலை செய்கிறது என நீதிபதி தீர்ப்பளித்தார்.குறித்த வழக்கில் எதிரி சார்பில் சட்டத்தரணி சிவநேசனும்சட்டமாஅதிபரை பிரதிபலிக்கும் வகை யில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜராகி இருந்தனர். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 120 | 150 |
| தக்காளி | 120 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 120 | 90 | 80 | 120 |
| கரட் | 120 | 100 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 180-200 | 120-180 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 120 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 140 |
| பீற்றூட் | 100 | 90 | 100 | 120 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 500 | 400 |
| போஞ்சி | 100 | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 60 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |

# இராசி பலன்

31.05.2013
(வைகாசி 17, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சப்தமி முன்னிரவு 7.07 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.01 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**இடபம்** சொல்லை செயலாக்கிக் காட்ட முன்வருவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பாதியில் நின்ற பணியினை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கடகம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், வருமானம் வருவதற்கு முன் செலவுகள் காத்திருக்கும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சிதரும், குடும்பத்தில் நிலவிய கசப்புணர்வு அகலும்.

**கன்னி** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள், உடல் நலம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**துலாம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பணத் தேவைகளை நிறைவேற்ற நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வருகையுண்டு.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடைவீர்கள், விரதம், வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டியநாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றும் தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொதுவாழ்வில் புகழ்கூடும், கணபதியை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொலைபேசித் தகவல்களால் நன்மையுண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பண விரயங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மீனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறிடத்து வியாபாரிகளால் எமது வியாபாரம் பாழாகின்றது

## நிரந்தர வியாபாரிகள் குமுறல்


(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் நடை பாதை வர்த்தகர்களால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாக நிரந்தர வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் தொடர்பில் வர்த்தகர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக தென்னிலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வருகை தரும் வியாபாரிகள் இங்கு நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நிரந்தர வியாபாரிகளின் வருமானம் குறைவடைந்துள்ளது.

நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களிலும் மற்றும் முக்கியமான கேந்திர நிலையங்களிலும் இந் நடைபாதை வியாபாரிகள் வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்ற னர்.

எனவே, நகர சபை, பிரதேச சபை என்பன இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து இந்த நடைபாதை வியாபாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதியின் நிரந்தர வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)



நன்றி: ஐலண்ட்

## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சிறுவர்கள் பாதுகாப்புக்குழுவை வலுப்படுத்தல் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பருத்தித்துறைப் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-19)

## வேளாங்கண்ணி ஆலய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தூய அன்னை வேளாங்கண்ணி தேவாலய திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தேவாலயத்தை யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு வணதோ மஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைக்கவுள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள குறித்த அன்னை வேளாங்கண்ணி தேவாலயம் போர்க்கால சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு சேதமடைந்தது.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இது இருந்தமையால் கடந்த 18 வருடங்களாக திருப்பலிகள் எதுவும் இங்கு இடம்பெறவில்லை. தற்போது இத்தேவாலயம் மீளப் புனரமைக்கப்பட்டு திறப்பு விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# தீக்காயங்களுக்குள்ளான இளம் தாய் உயிரிழப்பு

## சந்தேகத்தில் கணவன் கைது

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு குழந்தைக்கு தாயான இளம் குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததோடு இவரது மரணத்திற்கு காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் கணவனைப் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நாவலடி அரியாலைச்சேர்ந்த தன்சன் காயத்திரி (வயது 18) என்ற இளம் குடும்பப் பெண் கடந்த 28 ஆம் திகதி உடல் முழுவதும் தீக்காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் பிற்பகல் வைத்தியசாலையில் குறித்த குடும்பப் பெண் உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

விசாரணையின்போது உயிரிழந்த பெண்ணின் தாயாரான தனராஜ் கவிதா என்பவரால் கூறப்பட்டதாவது,

தனது மகள் 15 வயதிலேயே காதலித்து வீட்டை விட்டு வெளியேறியதாகவும் அதன் பின்பு மகளுக்கும் தங்களுக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இருந்ததில்லை எனவும் குறிப்பிட்டதோடு தனது மகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் இருப்பதைக் கேள்விப்பட்டு தாம் அங்கு வந்தபோது தனது மகளால் கணவன் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ தினத்தன்று தனது கணவன் மண்ணெண்ணெய் வாங்கி வருமாறு கடைக்கு அனுப்பியதாகவும் அதன் பின்பு வீட்டு அறையினுள் பூட்டி வைத்து தன் மீது மண்ணெண்ணையை ஊற்றி தீ மூட்டி விட்டு வெளியேறியதாகவும் பின்பு ஒரு வழியாக தான் அங்கிருந்து தப்பித்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்ததாகவும் மகள் தனக்கு கூறியதாக உயிரிழந்த பெண்ணிக் தாயார் விசாரணையின்போது தெரிவித்ததையடுத்து விசாரணைக்காக அழைக்கப்பட்ட கணவனை பொலிஸார் கைது செய்தனர்.

அத்தோடு பிரேத பரிசோதனையின்போது உயிரிழந்த பெண்ணின் உடலில் அடி காயங்கள் இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-6)

## மஹோற்சவம்


பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மஹோற்சவத்தில் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மிருக யாத்திரைக்காக பொலிகண்டி இலுப்பை மூலை சித்தி விநாயகர் ஆலயத்துக்கு சுவாமி ஊர்வலமாக செல்லவுள்ளார்.

தொடர்ந்து மறுநாள் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு பூங்காவனமும் தொடர்ந்து 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறமும் மறுநாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் இரவு 8 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

யாழ்.செய்திகள்

# பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல்



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாரின் ஏற்பாட்டில் கிராமிய பாதுகாப்புக் குழுவினருடன் மக்களின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரி சங்காரா தலைமையில் நடைபெற்றது.

இப் பாதுகாப்புக் குழுவினர் களவு, கொலை, இளைஞர்களின் அடாவடித்தனம் என்பவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதோடு அவர்கள் மக்களுக்கு பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று இக் கலந்துரையாடலில் கோரப்பட்டது.

இது தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் குற்றச் செயல்கள் நடைபெற்றால் உடனடியாக நெல்லியடிப் பொலிஸாரிடம் கிராமியப் பாதுகாப்புக் குழுவினர் அறிவிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. இவ்வாறு குற்றச் செயல்களை, அதற்கான அறிவித்தல் நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-3-60)

## சரா பொன்விழாவும் நூல் வெளியீடும் மாணவர்கள் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

சரா பொன்விழாவும் மாணவர் கௌரவிப்பும் நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், மடு கல்வி வலய பணிப்பாளர் எ.ஜே.குரூஸ், தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவத்திரை, சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட பிரதம இணைப்பாளர் வை.தியாகராஜாவும் கௌரவ விருந்தினர்களாக இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# பிரதான வீதிகளை புனரமைத்து தருக



(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசத்திற்குள் வீதி அதிகார சபைக்குட்பட்ட மூன்று பிரதான வீதிகள் சேதமடைந்துள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள குஞ்சர் கடை வீதி, மூத்த விநாயகர் கோவில் வீதி, விக்கினேஸ்வரா வீதி. ஆகிய மூன்று பிரதான வீதிகளும் சேதமடைந்துள்ளமையால் பொதுமக்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலே பயணம் செய்யவேண்டியுள்ளது.


குறித்த வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழை நீர் தேங்கி நிற்பதுடன் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

இவை பிரதான வீதிகளாக உள்ளமையால் வீதி அதிகார சபையினர் இது விடயத்தை கவனத்திற் கொண்டு இவ் வீதிகளைப் புனரமைத்துத் தர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிராந்தியின் சேவை உலகிற்கே முன்மாதிரி

## உச்சி குளிர்ந்தார் சீனாவின் முதற்பெண்மணி பெங்லி யு



வளர்ச்சி காணும் உலகில் மனிதத்துவத்தின் பெயரால் குழந்தைகளுக்கும் மகளிருக்கும் இலங்கை ஜனாதிபதியின் பாரியார் காட்டும் பெரும் அன்பும் கருணையும் முழு உலகுக்கும் முன்மாதிரியாகுமென சீன ஜனாதிபதியின் பாரியார் பெங்லி யு ஆன் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சமூகப் பணிகள் ஊடாக குழந்தைகளின் எதிர்காலத்துக்கும் அபிவிருத்திக்கும் அர்ப்பண சிந்தையுடன் மகளிரின் அபிவிருத்திக்கும் அர்ப்பண சிந்தையுடன் பாடுபடும் இவர் இந்த நூற்றாண்டில் பரிபூரணம் பெற்ற அபிமானமிக்க பெண்மணி என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவை சீன மக்கள் அரங்கில் சந்தித்த போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இச்சந்திப்பில் இருவருக்குமிடையே அரை மணித்தியாலம் நட்புறவு ரீதியில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

சிரிலிய சவிய- கால்டன் சுவ உதான திட்டங்கள் தொடர்பாக அவர் சீன ஜனாதிபதியின் பாரியாருக்கு விபரித்தார். பிள்ளைகளதும் மகளிரதும் கல்வி- சுகாதாரம்- சமூக சேமந லப் பணிகளுக்கு உதவுவதற்கும் சீன ஜனாதி பதியின் பாரியார் விருப்பம் தெரிவித்தார்.

முப்பது வருட பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் மிக விரைவான அபிவிருத்தியை அடைந்து தெற்காசியாவில் விசேட நாடாக இலங்கை மாறுமெனவும் சீன ஜனாதிபதியின் பாரியார் குறிப் பிட்டார்.

அதற்காக ஜனாதிபதிக்கும் அரசுக்கும் தாம் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாகவும் இலங் கைக்கு விரைவில் விஜயம் மேற்கொள்ள தாம் எதிர்பார்ப்பதாகவும் பெங்லி யு ஆன் தெரிவித்தார்.

சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவரின் பாரியார் ரேகா குணசேகர உட்பட ஜனாதிபதி பாரியார் மற்றும் அலுவலக பிரதிநிதிகளும் இச் சந்திப்பில் பங்குபற்றினர். (அ-2)

## புகைத்தல் எதிர்ப்பு தின கொடி வாரம் இன்று

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி மகா சங்கத்தினரின் புகைத்தல் எதிர்புதின கொடி வாரம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடத்தப்படவுள்ளது.

இப்பிரதேச மக்கள் புகைத்தலுக்கு செலவு செய்யும் பணத்தை இக் கொடி பெறுவதற்கு பயன்படுத்தலாம்.

இவ்வகையில் பெறப்படும் நிதி பல ஏழை மாணவர்களின் கல்விக்கு பயன்படுத்தப்படும் என சமுர்த்தி மகா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-3-29)

**சிவஸ்ரீ பொன் விநாயகமூர்த்திக் குருக்கள்**
(C.T.B. முன்னாள் ஊழியர்)

## 27 ஆம் நாள் புனர்தின குருபூசை அழைப்பும் உளமார்ந்த நன்றி நவிலலும்



05.05.2013 அன்று எங்கள் குடும்பத் தலைவர் சிவஸ்ரீ பொன்.விநாயமூர்த்திக் குருக்கள் சிவபதம் எய்தியமையினை அறிந்ததும் ஓடோடிவந்து உதவிகள் பல புரிந்தும் அனுதாபம் தெரிவித்தும் துணைநின்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஆலய பரிபாலகர்கள், கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர், இந்து மன்றத்தினர் ஆகியோருக்கும் தொலைபேசி, துண்டுப் பிரசுரம், பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் வவுனியா வைத்தியசாலை ஊழியர்களுக்கும் வவுனியா நண்பர்களுக்கும் குருக்களின் இறுதிக் கிரியைகளிலும் ஊர்வலத்திலும் பங்குகொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

02.06.2013 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது **அன்னை இல்லத்தில்** நடைபெறும் புனர்தினகுரு பூசையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'அன்னை இல்லம்', கண்ணகை அம்மன் கோயிலடி,
இராமநாதன் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

சிவஸ்ரீ பொன்.விநாயகமூர்த்திக்
குருக்கள் குடும்பத்தினர்
தொ.பே: 0776848645

(2864)

# மணி விழா நிகழ்வுகள்


கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணி விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 க்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், விசேட விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் க.அருள்வேல், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேனாட், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா இந்துமாமன்றச் செயலாளர் சி.ஏ. இராமஸ்வாமி, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் மணிவிழா நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளதுடன், அவரால் எழுதப்பட்ட எட்டு நூல்களின் அறிமுக உரைகளும் இடம்பெறவுள்ளன. (அ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனை பல்கலைக் கழகத்தில் நேற்று (30.05.2013) நடைபெற்ற 75 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற செல்வன்

**கனகநாயகம் பிரசாந்தன்** (BA) அவர்கள்

மென்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, அக்கா, தம்பிமார்.

**நியூ பெஷன் பார்க்,**
**சுன்னாகம்.**

(சி-3462)

## தூண்டிலில் மீன்பிடித்தவர் கைது

சுமார் 50 கிலோ கிராம் மீன்களை தூண்டில் போட்டு பிடித்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கண்டி தலதா மாளிக்கைக்கு முன்பாகவுள்ள போகம்பறை குளத்தில் தூண்டில் போட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே அவரை கண்டி குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். அவரிடம் உயிருடன் இருந்த மீன்களை மீண்டும் குளத்திற்குள் விட்டுள்ளனர். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம் : 5'6"<br>கி.பா: 22.5, 4 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L காசாளர் தனியார்<br>தொ.இ: B -1881 | பிறப்பு: 1980 இந்து (குருகுலம்)<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>உயரம்:5'3"<br>கி.பா: 53, 7 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, Accounts Clerk தனியார்<br>தொ.இ: G -1887 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 167 செ.மீ.<br>தகைமை/ தொழில்: A/L, தொழில்நுட்பவியலாளர்<br>தொ.இ: B -1883 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 4, 8இல் செவ்.<br>உயரம் : 5'<br>தகைமை/ தொழில்:GAQ, NGO Officer<br>தொ.இ: G-1890 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'4"<br>கி.பா: 47<br>தகைமை/ தொழில்: O/L வியாபாரம்<br>தொ.இ: B -1884 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 23<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1895 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 6'<br>கி.பா: 44.75, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L Net Cafe<br>தொ.இ: B -1886 | பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா: 52<br>தகைமை/ தொழில்: சிறப்புப் பட்டதாரி, Computer Operator<br>தொ.இ: G -1896 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அபிலாசைகளை புரிந்துகொண்டு நியாயமான அரசியல் தீர்வு வழங்குங்கள்

## சிறிதரன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

**தமிழர்களுடைய சொந்த நிலங்கள் பறிக்கப்படுகின்றன. அவர்கள் தங்களுடைய சொந்த நிலங்களிலே குடியேறி வாழமுடியாமல்,பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலும் இருக்கின்றனர் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார். "காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளை வழங்குதல் "தொடர்பான விவாதம் பாராளுமன்றில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. அதில் கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,தமிழர்களுடைய பிரதேசங்களில், அவர்கள் மீள் குடியேற்றப்படாமல், அவர்களுடைய காணிகள் பலவந்தமாக பறிக்கப்பட்டு வருகின்றன.**

இம் மக்கள் தமது சொந்த நிலங்களில் 25 ஆண்டுகளுக்கு மேலாக வாழ முடியாது அகதிகளாக அலைந்து திரிகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு-கிழக்கு மக்களின் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 200 பரப்புக் காணிகளையும் வடமராட்சி கிழக்கில், கிட்டத்தட்ட 700 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளையும் இராணுவத்தினர் சுவீகரித்துள்ளதுடன்,,மண்டைதீவுப் பகுதியில் ஏறத்தாழ 600 ஏக்கர் காணிகளை கடற்படையினர் தமதாக்கியுள்ளனர். வலிகாமம் தென் மேற்கு செயலக பிரிவுக்குட்பட்ட காணிகளும் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவு, தர்மபுரம் மேற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள 60 ஏக்கர் காணியை எடுப்பதற்கு காணி சுவீகரிப்பு அலுவலரால் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஒலுமடு,கொக்கச்சான் குளம், கருங்காலிக் குளம் போன்ற பல இடங்களில் தமிழர்களுடைய நிலங்கள் இராணுவத் தேவைகளுக்கென்ற பேரில் சிங்களக் குடியேற்றங்களுக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்திலுள்ள பல இடங்களில் 5 ஆயிரம் சிங்கள மக்களின் குடியேற்றத்திற்கு காணிகளை சுவீகரிக்க அரசாங்கம் அறிவித்தல்களை வழங்கியுள்ளது.

இதேபோல், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கேப்பாப்புலவு என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு குடியேறவிடாமல் தடுத்து சீனியா மோட்டை என்ற பகுதியில் குடியேறியுள்ளார்கள்.

மணலாறு பிரதேசத்திலுள்ள 26ற்கும் மேற்பட்ட தமிழர் பாரம்பரிய கிராமங்களில் மக்கள் குடியேற்றப்படாமல் அரசால் காணிகள் பறிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு, அண்மையில் ஜனாதிபதியினால் காணிக்கான உறுதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட மோசமாக, கிளிநொச்சியில் அரசாங்கம் காணிகளைப்பறிப்பதுடன், தென் பகுதியிலிருந்து வரும் சிங்கள சமூகத்தை சேர்ந்த பலம்வாய்ந்தவர்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள உதிரவேங்கை வைரவர் ஆலயக் காணியை பறித்துள்ளனர்.

இது தொடர்பாக கிளி.பொலிஸ் நிலையத்திலும், உதவி அரசாங்க அதிபர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகி யோருக்கும் தெரியப்படுத்தியும், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என ஆலய நிர் வாகத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், நீதிமன்றம் தற்காலிக ஆணையை மட்டும் பிறப்பித்துள்ளது.

அத்துடன் வடக்கு மக்கள் தமது வாழ்வாதாரத்தை நகர்த்த முடியாத நிலைக்கும் உட்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் சிறுபோக நெற்செய்கையில் ஏற்பட்ட அழிவுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. காலபோகத்தின் பொழுது 132 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி பெறுமதியில் நெற் செய்கை அழிவடைந்துள்ளது.

ஆனால் பொலநறுவை, அநுராதபுர மாவட்ட மக்களுக்கு கடந்த கால போகத்தின் போது வயல்களில் ஏற்பட்ட அழிவுக்குரிய நிவாரணம் வழங்கப்பட்டது நான் இது தொடர்பாக பஷில் ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியும் எதுவித பயனுமில்லை.

தாண்டிக்குளத்தில் மூன்று பெண் குழந்தைகளை கிணற்றில் தள்ளி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் ஒரு தாய் இதன் காரணம் வறுமைதான். ஆனால் தற்போது வறுமை மறைக்கப்பட்டு மன நோயாளி என்று பெயர் சூட்டப்பட்டு வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மொத்தத்தில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் நிலங்கள் அபகரிப்பு, கலாசாரச் சீரழிவு, வாழ்வாதாரம் சிதைப்பு, வேலையில்லாப் பிரச்சினை, வாழ்வியல் ஆதாரம் என்பன அழிக்கப்படுதல், இராணுவப் பிரசன்னம், இராணுவப் புலனாய்வாளர் பின் தொடரல், சாட்சியங்கள் மறைக்கப்படுதல், நீதி மறுக்கப்படுதல் என்பவை இடம் பெறுகின்றன.

எமது மக்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்து நியாய பூர்வமான தீர்வு வழங்கப்படாவிடின் வரலாறு, தான் விரும்பும் திசையில் இலங்கையை இட்டுச் செல்லும் என அவர் மேலும் தெரிவித் துள்ளார். (அ)

# சுவிஸ் நாட்டின் பாணியில் சர்வஜன வாக்கெடுப்பு

## அரசாங்கம் ஆலோசனை

சுவிட்சர்லாந்து பாணியிலான வெகுஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் பற்றி நாட்டு மக்களின் கருத்தை அறிந்து கொள்ள சுவிட்சர்லாந்தில் நடத்தப்படும் வெகுஜன வாக்கெடுப்பைப் போன்றதொரு வாக்கெடுப்பு நடத்த இலங்கையில் திட்டமிடப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் ஏதேனும் ஓர் விடயம் குறித்த காலப்பகுதிக்குள் குறிப்பிட்டளவு கையொப்பங்கள் திரட்டப்பட்டு அது தொடர்பில் வெகுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதற்கு அமையவே தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசியல் அமைப்பில் திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியம் எழுந்துள்ள நிலையில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள சுவிஸ் மாதிரியிலான வெகுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆய்வு செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சியை விடவும் இரத்தினபுரியில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்வதாகவும் அவர்களும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கோரினால் சிக்கல் நிலைமை ஏற்படும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக அறிய வருகின்றது. (அ-2)



யாழ்.மாவட்டத்திலுள்ள 20 பாடசாலைகளின் தேசிய மாணவர் படையணிக்கான பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள் வெளியேறும் நிகழ்வு நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தேசிய மாணவர் படையணியின் மரியாதையை ஏற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். (படம்:- எஸ்.ஆர்.கரன், என்.குமார்)

## சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் எதிர்வரும் ஜூன் மாதம் 10, 11,12ஆம் திகதிகளில் நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் அரச திணைக்களத்தினர், இத்துறை சார்ந்த தனியார் நிறுவனத்தினர் போன்றோரைக் கலந்து பயனடையு மாறு திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் டாக்டர் திருமதி சி. துரைரட்ணம் அறிவித்துள்ளார். (அ)

## வடக்கு மாகாண தேர்தலில் வெற்றியீட்டுங்கள் பார்க்கலாம்

### த.தே.கூட்டமைப்பு தகவல்

வடமாகாண சபை தேர்தலை நடத்தி அம்மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதாக சர்வதேசத்திற்கு வாக்குறுதி அளித்துள்ள அரசாங்கம், தற்போது அதற்கு எதிராக பிரேரணையை பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்து 13 ஆம் திருத்தச்சட்டம் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சிக்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு-07 பாண்பிளேஸ், அசாத்சாலி மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கில் அரசாங்கம் ஒரு போதும் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது. அதனாலேயே தேர்தலை நடத்தாமல் இருக்க பல்வேறு சதிகளை செய்கிறது. அவ்வாறு இல்லையென்றால் வடமாகாணத்தில் உடனடியாக தேர்தலை நடத்தி அரசை வெற்றியீட்டிக் காட்டுமாறு கூட்டமைப்பு சவால் விடுத்துள்ளது. (அ-2)

## நாடகப் போட்டியில் யாழ்.ம.கல்லூரி முதலாமிடம்

(மல்லாகம்)

கொழும்பு றோயல் கல்லூரியினால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி முதலாம் இடத்தை பெற்றுள்ளதுடன் ஆறு விருதுகளையும் பெற்றுள்ளது.

மேற்படி மாவட்ட மட்ட நாடகப் போட்டி அண்மையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் "விடியலின் பாதை" தலைப்பில் நாடகத்தை மேடையேற்றி யாழ்.மத்திய கல்லூரி நாடக அணி மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்றதுடன் ஆறு விருகளையும் வென்றுள்ளது.

இதன்படி இந்நாடகம் சிறந்த நெறியாள்கை, சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த ஒப்பனையாளர் ஆகிய ஆறு விருதுகளை பெற்றுள்ளது. (அ-5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார வெறியை இல்லாதொழிக்கும் அரசியலமைப்புக்கு ஆதரவு தாருங்கள்

## எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை


(கொழும்பு)

**அதிகார வெறியை இல்லாதொழித்து மக்களிடம் அதிகாரங்களை மீளளிக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பிற்கான யோசனைக்கு நாட்டு மக்கள் ஆதரவு வழங்கி புதிய இலங்கையை உருவாக்க முன் வரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியால் முன் வைக்கப்பட்ட புதிய அரசியலமைப் பிற்கான யோசனையை அவர் நேற்று முன்தினம் பாராளுமன் றத்தில் வெளியிட்டதன் பின்னர் உரை யாற்றுகையிலேயே மேற்கண் வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்று கையில்,

நாட்டில் நீதியை நிலை நாட்டும் வகையிலும், ராஜபக்ஷ ரெஜிம ன்டை இல்லாதொழிக்கும் வகை யிலும், நாட்டு மக்களிடம் அதிகார த்தை ஒப்படைக்கும் வகையிலும், ஐக்கிய தேசியக் கட்சியால் புதிய அரசியல் அமைப்பிற்கான யோசனை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு நாட்டு மக்கள் பூரண ஒத்து ழைப்பு வழங்க வேண்டும்.



நாட்டில் நீதி குழிதோண்டி புதைக் கப்பட்டுள்ளது. ஊழல் மோசடிகள் நிறைந்து காணப்படுகின்றன. நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனா திபதி முறைமை அநாவசியமாக பயன்படுத்தப்படுகின்றது. தற்போது கிரிக்கெட் விளையாட்டும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவற்றை இல்லாதொ ழிக்கவே ஐக்கிய தேசியக் கட்சியால் புதிய அரசியல் யோசனை வெளி யிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி முறையை ஒழித்தல், சுயாதீன ஆணைக்குழுக் களை அமைத்தல், மக் களிடம் அரசி யல் அதிகாரத்தை வழங்குதல் மற் றும் அரசியலில் பெண்களுக்கு முன் னுரிமை வழங்குதல் போன்ற யோச னைகள் முன்வைக்கப்பட்டுள் ளன.

ஆகவே இதற்கு நாட்டு மக்க ளின் பூரண ஆதரவு தேவைப்படுகி ன்றது. மக்கள் அனைவரும் இத ற்கு ஆதரவு தெரிவித்து, புதிய இலங்கையை உருவாக்க ஒன்றி ணைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சீனி- உப்பு பாவனையை கட்டுப்படுத்த சுற்றறிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் தனிநபர்களின் நாளாந்த சீனி மற்றும் உப்பு நுகர்வு அதிகரித்துக் காணப்படுவதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய விசேட சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.**

சுகாதார அமைச்சு ஜூன் மாத த்தை தேசிய போஷாக்கு மாதமாகப் பிரகனடப்படுத்தியுள்ளது. இதன் நிமிர்த்தம் சுகாதார அமைச்சின் சுகா தார கல்விப் பணியகம் ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில், இலங்கையர் நாளொன் றுக்குமூன்றுதேக்கரண்டிசீனியையும் ஒரு தேக்கரண்டிக்கும் குறைவான உப்பையும் நுகர்வதற்கே சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சரியான போஷணை மூலம் ஆரோக்கியமானவாழ்வுஎன்றதொனிப் பொருளைக் கொண்டதாகவே இவ் வருட தேசிய போஷாக்கு மாதம் பிர கனப்படுத்தப்பட்டிருக்கின்றது. இக் காலப் பகுதியில் சரியான போஷா க்கு குறித்து மக்களுக்கு அறிவூட் டப்படும். அதேநேரம் இவ்வருட த்தை தொற்றா நோய்களைத் தவி ர்ப்பதற்கான வருடமாகவும் எமது அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. தொற்றா நோய்களுக்கும் போஷா க்குக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

அவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிபட முடியாதவை. அதனால் சரி யான போஷாக்கு மிக்க உணவு வகைகளை உட்கொள்வதில் விசேட கவனம் எமக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளன.

இதற்கு எமது மக்களின் உணவு மற்றும் பழக்கவழக்கத்தில் ஏற் பட்டிருக்கும் மாற்றமே பிரதான கார ணம்.

இந்நாட்டில் தினமும் இடம்பெறும் உயிரிழப்புக்களில் பெரும்பாலான வைக்கு தொற்றா நோய்களே அடிப் படைக் காரணங்களாக உள்ளன.

குறிப்பாக அதிக சீனி மற்றும் உப்பு பாவனை பல தொற்றா நோய் களுக்கு மூல காரணிகளாக விளங் குகின்றன. நீரிழிவு, இருதய நோய் கள், சிறு நீரகப் பாதிப்பு, புற்று நோய் கள் என்பவை குறிப்பிடத்தக்கன. இந்நோய்களுக்கு சிகிச்சை அளி க்க வென சுகாதார அமைச்சு வருடா வருடம் பெருந்தொகை நிதியைச் செலவிட்டு வருகின்றது.

ஆனால், தற்போதைய உணவு மற்றும் நடத்தை பழக்க வழக்கங்க ளின் மாற்றத்தின் மூலம் இந் நோய் களைத் தவிர்த்துக் கொள்ளலாம். இலங்கையர் மத்தியில் நாளாந்த சீனி மற்றும் உப்பு நுகர்வு அதிக மாக உள்ளது. இதனைக் குறை ப்பது மிகஅவசியமான தேவையாக மாறி யுள்ளது.

அதை கருத்தில் கொண்டு இத ற்கு மாற்று வழி செய்யும் வகை யிலான சுற்றறிக்கையொன்று தயா ரிக்கப்பட்டுவருகின்றது. இச்சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


# வீரமாகாளியம்மனுக்கு நேற்று கொடியேற்றம்



போரதும் இனி இங்கில்லையென்று
பொறுமையோ டிருந்தார் மக்கள்
சீரான வாழ்வு எமக்கினி இங்கு
சிறந்தோங்கு மென்றார் தாயே!
ஆராத காதல் கொண்டு நாமும்
அன்னையே உனைப் பணிந்தோம்
தீராத சோகம் இங்கு எம்மை
தினம் தினம் வருத்துதம்மா
ஓராயிரக் கணக்கில் எம்மண்ணை
ஒரு பொழுதில் இழக்கப் போறோம்
வாராததுபோல் எமக்கு வரவிருக்கும்
சுதந்திரத்தால் தான் என்ன பலன்?
சீராக ஆள்வோர்– தங்கள்
சிந்தையில் புகுந்து தாயே
பார்புகழ்ந்து ஏற்க வல்ல
பக்குவத் தீர்வொன்று தாராய்

விகடகவி
மு.திருநாவுக்கரசு.

# வரலாற்றுப் புகழ் பாடும் வண்ணை நாயகியே!



வரமீய்ந்து எமையாளும்
வீரமாகாளியே கொடியேற்று
வரலாறு புகழ்பாடும் வண்ணை
நாயகியே கொடியேற்று
கரமீதே வாளேந்தி கயமைகளை
ஒழிப்பவளே கொடியேற்று
கால சொரூபிணியாய் காவல்
செய்பவளே கொடியேற்று
தீரமுடன் வாழ போராடும்
தேசத்தைக் காக்க கொடியேற்று
திருவிழியால் அருள்பொழிந்து
வாழ்விக்க கொடியேற்று
வீரமுடன் வாழும் விடிவதனை
தந்தருள கொடியேற்று
வீரமாகாளியே வேண்டிய
தீர்வு தர கொடியேற்று

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

# வடக்கில் 15 ஆயிரம் படையினர் மட்டுமே நிலை கொண்டுள்ளனர்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

வடக்கில் வெறும் 15 ஆயிரம் படையினர் மட்டுமே நிலை கொண் டிருப்பதாகவும் அவர்களும் கூட அபிவிருத்திப் பணிகளை மேற்கொ ண்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்று முன்தினம் செய்தியாளர்க ளிடம் உரையாற்றிய அவர்,

விடுதலைப் புலிகளுக்கும் அரசு படைகளுக்கும் இடையில் நடந்த உள்நாட்டுப் போரினால் மோசமா கப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அதி கம் வாழும் இலங்கையின் வடக்குப் பகுதியை வேண்டுமென்றே இரா ணுவ மயப்படுத்தும் முயற்சிகள் ஏதும் இடம்பெறவில்லை.

போரின் போது வடக்கில் 65 ஆயிரம் இலங்கைப் படையினர் நிலை கொண்டிருந்தனர். தற்போது அங்கு வெறும் 15 ஆயிரம் படையி னர் மட்டுமே நிலை கொண்டிருக்கி ன்றனர்.


அவர்களும் கூட அபிவிருத்திப் பணிகளையே மேற்கொள்கின்ற னர். அவர்கள் சமூகத்தில் முன்னு தாரணமாக திகழ்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படைகளால் இழைக் கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளி த்த அவர்,

மிகவும் உறுதியான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் தான் எதிர்வரும் நவம் பரில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு இல ங்கையில் நடைபெறவுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னர் நிலைமை களில் முன்னேற்றங்கள் ஏற்பட் டுள்ளன. எனினும் ஒரே இரவில் எல்லா மாற்றங்களையும் செய்ய முடியாது.

இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடி யேற்றப்பட்டுள்ளனர். கண்ணி வெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. உள்நாட்டுப் போருக்குக் காரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அரசியல் தீர்வு உள்ளி ருந்தே வரவேண்டும். வடக் கில்இந்த ஆண்டு இறுதியில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது என் றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





மருதங்கேணியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட நீதிபதி கைதானார்

(கொழும்பு)

ஹோமாகம மாவட்ட நீதிபதி சுனில் அபேசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாவட்ட நீதிபதி 3 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக் கொள்ள முயற்சித்ததாக நேற்று முன்தினம் இலஞ்ச மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர் தரப்பிற்கு சார்பான வகையில் வழக்கை விசாரிப்பதன் பொருட்டே அவரால் இலஞ்சம் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கப் பட்டதாக ஆணைக் குழுவின் பணிப்பாளர் லஷ்மி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி குறித்த 3 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொள்வதற்கு நேற்று முன்தினம் மாலை ஹங்வெல்ல பகுதிக்கு சென்றிருந்த போதே அவர் ஹோமாகம மாவட்ட நீதிபதியால் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகத்திற்குரிய மாவட்ட நீதிபதி நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார் என இலஞ்சம் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ-2)

# இந்திய அமைதிப்படை அதிகாரிகளுக்கு 25 ஆண்டுகள் கழித்து சிறை

(கொழும்பு)

இலங்கையில், இந்திய அமைதிப்படையினர் தங்கி இருந்த போது, அவர்களுக்கு தரம் குறைந்த மற்றும் அனுமதி பெறாத உணவுகளை விநியோகித்த இரண்டு முன்னாள் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

இராணுவ ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் குப்தா மற்றும் ஓய்வுபெற்ற மேஜர் கடியான் ஆகிய இருவருக்குமே இந்த தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டுகளில், இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினருக்கான உணவு கையிருப்பில் இருந்த போதும், அவர்கள் இருவரும் எம்.எஸ்.கொஸ்டா அன்ட் கம்பனி என்ற நிறுவனத்திடம் இருந்து பொதி செய்யப்பட்ட உணவுகளை பெற்று விநியோகித்துள்ளனர்.

இது தொடர்பில் அரசாங்கத்திடம் உரிய அனுமதி பெற்றிருக்கவில்லை. இது இராணுவ சட்டத்தின் படி குற்றமாகும்.

இந்திய மத்திய புலனாய்வுத்துறை நீதிமன்றத்தில் கடந்த 25 ஆண்டுகளாக இந்த வழக்கு விசாரணையில் இருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த இரண்டு அதிகாரிகளுக்கும் இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் அறவிட உத்தரவிடப்பட்டதுடன், குறித்த உணவுகளை விநியோகித்திருந்த நிறுவனத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் அறவிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நான்கு உடன்படிக்கைகள்


தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நான்கு மிக முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்தாகவுள்ளதென இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாய்லாந்தின் பிரதமர் யிங்லக் சின்வேட்ரா இன்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், இராஜதந்திரிகள் மற்றும் முக்கிய அதிகாரிகளது கடவுச் சீட்டுக்களை வைத்திருப்போருக்கு இரண்டு நாடுகளுக்கும் விசா தேவையில்லை என்ற உடன்படிக்கை மற்றும் இரண்டு நகர இணைப்பு ஆகிய நான்கு உடன் படிக்கைகள் கைச்சாத்தாகவுள்ளன.

இதன்படி, கண்டி நகரமும் தாய்லாந்தின் ஆயுத்தியா நகரமும் ஒன்றிணைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

தாய்லாந்து பிரதமர் இலங்கை விஜயத்தின் போது, ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளுடன் சந்திப்புக்களை மேற்கொள்வாரென தெரிவிக்கப்படுகிறது. (அ-2)



யாழ்.இந்து சிவஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றபோது... (படம் :- மானிப்பாய் செய்தியாளர்)

# ஷிராணி மீதான குற்றப் பிரேரணை; கருத்து தெரிவிக்க சம்பந்தனுக்கு அனுமதி

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள விசேட மேன்முறையீட்டு மனு குறித்து, கருத்துத் தெரிவிக்க பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் விஜிதஹேரத் ஆகியோருக்கு உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்துள்ளது.

குற்றப் பிரேரணையை விசாரணை செய்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை நிராகரித்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்ட கட்டளையை இரத்து செய்யுமாறு கோரியே சட்டமா அதிபரால் விசேட மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான சலீம் மர்சூக், பி.ஏ.ரத்னாயக்க, சந்தியா ஹெட்டிகே, ரிவா வணசுந்தர, ரோகிணி மார சிங்க ஆகிய ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

பாராளுமன்ற உறுப் பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் விஜிதஹேரத் ஆகியோரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட வாதங்களின் அடிப் படையிலேயே அவ்விருவரும் கருத்துரைப்பதற்கு நீதி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மனு மீதான விசா ரணை எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)

# அன்னாள் ஆலய திறப்புவிழா

வலைப்பாடு தூய அன்னாள் ஆலய திறப்பு விழா நாளை (01.06.2013) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஆயர் இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஆலய பங்குத்தந்தையும் பங்கு மக்களும் அறிவித்துள்ளனர். (அ)

# புத்திரிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்; தந்தைக்கு 39 ஆண்டுகள் கடூழிய சிறை

(அநுராதபுரம்)

தனது மகள்மார் இருவரை பாலியல் ரீதியாக துன் புறுத்திய தந்தையொருவ ருக்கு அநுராதபுர உயர் நீதி மன்றம் 39 ஆண்டுகால கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

16 வயதுக்கும் குறைந்த மகள்மார் இருவரை மிக மோசமான முறையில் பாலியல் ரீதியில் துன்புறுத்திய தாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சட்டமா அதிபரால் தந்திரிமலை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான நபர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொள்ளவதாக குறித்த நபர் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து அநுராதபுர உயர் நீதிமன்ற நீதவான் சுனந்த குமார ரத்நாயக்க இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

தண்டனை விதிக்கப்பட்ட போது, குறித்த நபர் தனது மூத்த மகளை மிக மோசமான முறையில் பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றத்திற்காக பத்தாண்டுகால சிறைத் தண்டனையை அனுபவித்து வந்தார். அந்தத் தண்டனைக் காலம் பூர்த்தியாவதற்கு முன்னதாகவே 39 ஆண்டுகால தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நட்ட ஈடு வழங்குமாறும் குற்றவாளிக்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# நாட்டின் சகல கைதிகளுக்கும் விசேட மருத்துவ பரிசோதனை

நாட்டில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல கைதிகளுக்கும் முழு அளவிலான மருத்துவ பரிசோதனையொன்று நடத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

இதனையடுத்து, கைதிகளின் உளவியல் பிரச்சினைகள் மற்றும் ஏனைய சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வெலிக்கடை, போகம்பரை மற்றும் மஹர சிறைச்சாலைகளுக்கு பிரத்தியேக உளவியல் மருத்துவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

குறித்த சிறைச்சாலைகளுக்கு மூன்று நோயாளர் காவு வண்டிகளும் வழங்கப் படவுள்ளன.

மது மற்றும் போதைப் பொருள் பயன்பாடு காரணமாக கைதிகள் அதிகளவில் உளவியல் ரீதியாகப் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாக மேலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (அ-2)

# வனவிலங்கு பூங்காக்களில் இரகசிய கமராக்கள்

(கொழும்பு)

வனவிலங்கு பூங்காக்களைப் பார்வையிட வருவோரின் நடவடிக்கைகளை கண்காணிக்க இரகசிய கமராக்களை பொருத்தவுள்ளதாக வனவிலங்கு அமைச்சு தெரிவித்துள்ளது.

வனவிலங்கு பூங்காக்களுக்கு வருகை தருவோரும் சேவை வழங்குநர்களும் நல்லொழுக்க நியமங்களுக்கு மாறாக நடந்து கொள்வதாக ஆய்வொன்று சுட்டிக்காட்டியுள்ளமையால் அமைச்சு குறித்த நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக வனவிலங்கு பிரதியமைச்சர் எஸ்.எம். சந்திரசேன கூறியுள்ளார்.

இந் நிலைமை தொடர்பாக பல முறைப்பாடுகளும் அமைச்சுக்கு கிடைத்துள்ளன. தென்மாகாணத்திலுள்ள யால தேசிய பூங்கா தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

வனவிலங்கு திணைக்களம் சேவை வழங்குவோருக்கு நன் நடத்தைக் கோவையையும் வருகை தருவோர் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் பயிற்சிகளையும் வழங்கியுள்ளதாக வனவிலங்கு பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# எதேச்சதிகார தீர்மானங்களால் பாரியளவு நட்டம் ஏற்படுகின்றது

## கணக்காய்வாளர் நாயக திணைக்களம்

அரசாங்க நிறுவனங்களின் எதேச்சதிகார தீர்மானங்களால் பாரியளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது. அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு புறம்பாக சில அரச நிறுவனத் தலைவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக சிவில் விமான சேவை அதிகார சபையினால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையால் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

சிவில் விமான அதிகார சபையின் மிகை இலாப ஊதியக் கொடுப்பனவுக்காக மட்டும் 35 இலட்ச ரூபா விரயமாக்கப்பட்டுள்ளது.

பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை துறைமுக அதிகார சபை உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்கள் இவ்வாறு எதேச்சதிகார தீர்மானங்களை எடுப்பதனால் பொது மக்கள் பணம் விரயமாவ தாக கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் சுட்டிக்காட்டி தெரிவித்துள்ளது. (அ-2)

# யானை தாக்கியதில் விவசாயி பலி!

(மட்டக்களப்பு)

காட்டுயானை தாக்கியதில் விவசாயி ஒருவர் பலியானார். இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

ஈரலக்குளம் -ஆவட்டி யாவெளி கிராமத்தை சேர்ந்த சிவசம்பு சின்னவன் (வயது 63 ) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் தனது மாடுகளை மேய்ச்சலுக்காக விரட்டிக் கொண்டு காட்டு வழியாகச் சென்றபோது, யானையின் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை மலைப் பயணம்



ஆன்மீகம் 20

**அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி**

**30 ஆம் திகதியின் தொடர்ச்சி...**

அதுவரை நான் அறிந்திடாத ருசியோடு, தெய்வீக மணத்தோடு இருந்தது! ராஜா! நீயும் ஒய்வெடு என்று கூறிவிட்டு கஞ்சா சிலும்பியை நிரப்பத் துவங்கினார். நானும் சற்று தள்ளிச் சென்று தனிமையில் அமர்ந்தேன்! என்னை அறியாமல் கண்கள் மூடியது. ஆனால் விழித்துக் கொண்டிருப்பதுபோல் என்னுள் பல காட்சிகள் தோன்றின! வினோதமான உணர்வுகளும், அனுபவங்களும் படையெடுத்தன! மனம் ஆனந்தத்தில் திளைத்தது! வண்ண வளையங்கள் வட்டமிட்டன. அதனிடையே ஏதேதோ புரியாத காட்சிகள் உறங்காமலே கனவுபோல உணர்ந்தேன். இப்படி எவ்வளவு நேரம் அமர்ந்தேனோ நானறியேன். யாரோ என்னை மெல்லத் தொடுவதை உணர்ந்து கண் விழித்தேன். எதிரே சித்தர்பெருமான்! விஷமப் புன்னகையுடன் நின்றிருந்தார்!. என்ன ராஜா உன் மனசைப் பார்த்தாயா? என்றார். எனக்கு ஒன்றும் புரியாமல் விழித்தேன். மனசைப் பார்ப்பதா? உணரத்தானே முடியும்! என்று என்னுள் கேள்வி எழுந்தது! உடனே சித்தர், என்ன ராஜா புரியலையா? இப்போ வண்ண, வண்ண வளைய புகை மூட்டங்களுக்கு இடையே எதைப் பார்த்தாயோ அதுதான் உன்மனம். மறுபடியும் முயற்சிசெய்! அதில் அண்டங்களையே நீ பார்க்கலாம் என்று கூறிவிட்டு காட்டுக்குள் நடக்கத்தொடங்கினார். சித்தர் வாக்கு பலித்தது! வெகு விரைவில் என்மனம் மீண்டும் இவ்விடத்தில் சில விபரங்களை தெரியப்படுத்தினால் நன்றாகவே இருக்கும்.

என்ன ராஜா இன்னைக்கு இரவு இசை நிகழ்ச்சி ஒண்ணுக்கு ஏற்பாடு பண்ணியிருக்காங்க! என்றார். இசை நிகழ்ச்சியோ? அதுவும் இந்த காட்டில் இரவிலா? புதிர் விளங்கவில்லை!



ஆமா ராஜா! பச்சை மலைக்கு நான் வரும்போது, இங்கு இருக்கின்ற சித்தர்கள், ரிஷிகள், முனிவர்கள், தேவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு இசை நிகழ்ச்சி நடத்துவார்கள்! இன்னைக்கு ராத்திரி நீயும் தேவகானம் கேட்கப்போகிறாய் என்றார்.

மேலும் புதிர், மலையாக உருவெடுத்தது! ஒன்றும் புரியாமல் எங்கள் குழுவினர் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றேன். ஆனால், என்னைக் கண்டவுடன் எல்லோரும் முகத்தை திருப்பிக்கொண்டனர். அப்போது எங்களுடன் வந்திருந்த சிவலிங்கம் என்ற இளைஞன் காட்டுக்குள்ளிருந்து விறகு சேகரித்துக் கொண்டு வந்தவன் விறகுகளை அடுப்ப ருகே போட்டுவிட்டு, என்னை நோக்கி வந்தான்.

வந்தவன் என்னைப் பார்த்து கேலியாக சிரித்துவிட்டு, என்ன சார் இப்படி பண்ணீட்டிங்க? என்றான்.

நான் புரியாமல், அப்படி என்ன செய்துவிட்டேன்? என்றதும், என்ன சார் விளையாடுறீங்களா? என்றவன் குரலை தாழ்த்தி உங்களுக்கு என்ன ஆச்சு சேர்? ஏன் அப்படி பண்ணீங்க? என்றான்.

தம்பி! அப்படி நான் என்ன செய்தேன்? புரியாமல் கேட்டேன், அப்போ, நடந்தது எதுவும் உங்களுக்கு தெரியாதா? என்றான்! தெரிந்தால் ஏன் உன்னைக் கேட்கிறேன்? என்றேன்!

அதோ அங்கு உட்கார்ந்து தியானத்தில் இருந்தீர்கள்! திடீரென்று எழுந்து உங்கள் டிரஸ்ஸையெல்லாம் கழட்டி போட்டு விட்டு, ஆனந்தமாய் குளிக்க ஆரம்பித்தீர்கள்! இதைக் கண்டதும், எங்களுக்கெல்லாம் ஒரே அதிர்ச்சி.

எல்லோரும் சித்தர் சாமிக்கிட்ட ஓடி சாமி! அங்க ராஜாவை பாருங்களேன் என்றார்கள். இதை கேட்டதும் அருவியைப் பார்த்த சித்தர், அவர் இப்போ இருக்கிற நிலைமை உங்களுக்குப் புரியாது! போய் வேலைகளைப் பாருங்கள் என்று சத்தம் போட்டார்! எல்லாரும், திரும்பிவிட்டார்கள். உடனே சித்தர் அருவிகிட்ட வந்து உங்கக்கிட்ட ஏதோ சொன்னார். அதுக்கப்புறம்தான் நீங்க வெளியே வந்து, துணிகளை அணிந்து கொண்டீர்கள்! என்றதும் என்மனம், சித்தருக்கு நன்றி கூறியது.


தொடரும்

---

# நாடு, வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையே இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது

**30 ஆம் திகதியின் தொடர்ச்சி...**

உண்மையில் இந்த அரசாங்கத்தை முதலில் தேர்ந்தெடுத்தது தமிழர்கள்தான். இன்னும் துலக்கமாகக் கூறின்: விடுதலைப் புலிகள் இயக்கம்தான். தமிழர்களை வாக்களிப்பில் கலந்துகொள்ளவிடாது தடுத்ததன் மூலம், ரணில் விக்கிரமசிங்காவை தோற்கடிப்பதே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. ஏனெனில், ரணில் கொண்டு வந்த சமாதானத்தை ஒரு தர்மர் பொறி என்றே விடுதலைப்புலிகள் இயக்கம் பார்த்தது. எனவே, சூதான சமாதானத்துக்குப் பதிலாக வெளிப்படையான கடும் தேசியவாதிக்கு அரங்கமைத்துக் கொடுப்பதன் மூலம் தமது அரசியலின் அடுத்த கட்டத்திற்குரிய



புதிய தெரிவுகளை உருவாக்கலாமா என்று அந்த இயக்கம் சிந்தித்தது. எனவே, இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், எந்த இயக்கத்தால் இந்த அரசாங்கமானது ஆட்சிக்கு வந்ததோ அந்த இயக்கத்தை தோற்கடித்துப் பெற்றவெற்றியின்மூலம் முழுக்க முழுக்க சிங்கள மக்களுக்கே தலைமை தாங்குவது என்ற அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வந்துவிட்டது. அதாவது யுத்த வெற்றியை முதலீட்டாக்கி தனது ஆட்சித் தொடர்ச்சியைத் தக்கவைக்க முயல்கின்றது. எனவே, இந்த அரசாங்கம் முதலில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கே நன்றி சொல்ல வேண்டும். ஏனெனில் அந்த இயக்கம் பலமாக இருந்தபோது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர மறைமுகமாக உதவியது. பின்னர் அது தோற்கடிக்கப்பட்டதன் மூலம் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியிலிருப்பதற்கு உதவியிருக்கின்றது.

இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் வேறெந்த தலைமைத்துவமும் சிங்கள மக்களுக்கு பெற்றுக்கொடுத்திராத வெற்றி அது. அந்த வெற்றியின் மூலம் தென்னிலங்கையில் தனக்கு சவாலாக எழக்கூடிய எல்லா எதிர் தரப்புகளையும் தோற்கடிக்கும் அளவிற்கு சக்திமிக்கதாக இந்த அரசாங்கம் எழுச்சி பெற்றுவிட்டது. கடந்த வாரம் அரசாங்கத்திற்கு எதிராக அழைப்பு விடுக்கபட்டிருந்தபோது வேலைநிறுத்தம் தோற்றுப் போனதை இங்கு சுட்டிக்காட்டலாம். ஏனெனில், யாராலும் கற்பனை செய்ய முடியாதிருந்த ஒரு வெற்றியை இந்த அரசாங்கம் சிங்கள மக்களுக்கு பெற்றுக்கொடுத்திருக்கின்றது. எனவே, அப்படியொரு வெற்றியைப் பெற்ற இந்த அரசாங்கத்திற்கு யாரும் வகுப்பெடுக்க முடியாது என்றும் அது நம்புகின்றது. தான் பெற்ற வெற்றியின் பிரமாண்டம் காரணமாக உள்நாட்டில் மட்டுமல்ல அனைத்துலக அரங்கிலும் வகுப்பெடுக்கும் தகுதி தனக்கிருப்பதாக இந்த அரசாங்கம் நம்புகின்றது. வெற்றிவாதத்தின் உளவியல் எப்பொழுதும் அப்படித்தான் இருக்கும். அனைத்துலக அரங்கில் இந்த அரசாங்கத்தின் மீது வைக்கப்படும் விமர்சனங்கள் அதற்கு ஒருபொருட்டல்ல. அத்தகைய விமர்சனங்கள் கொழும்பு ஏழில் வசிக்கும் சிங்கள உயர் குழாத்தினருக்கு ஒரு பிரச்சினையாக இருக்கலாம். சிங்கள உயர் குழாத்தினர் இந்த அரசாங்கத்தைக் குறித்து அதிருப்தியோடு காணப்படுகின்றார்கள். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அரசாங்கத்தையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லைத்தான். ஆனால், இந்த அரசாங்கமானது சிங்கள உயர் குழாத்தினரால் தீர்மானிக்கப்படும் ஒரு அரசாங்கமல்ல. எனவே, சிங்கள உயர் குழாத்தின்மான, அவமானப் பிரச்சினைகளையிட்டு இந்த அரசாங்கம் அதிகம் அலட்டிக்கொள்ளாது. அனைத்துலக சமூகமானது சிங்கள உயர் குழாத்தின் விருப்பு வெறுப்புகளுக்கூடாக இந்த அரசாங்கத்தைப் புரிந்து கொள்ள முடி யாது. சிங்கள உயர் குழாத்தின் மத்தியி லுள்ள அதிருப்தியை மட்டும் அளவுகோலாகக்கொண்டு இந்த அரசாங்கத்தின் எதிர்காலத்தைக் குறித்து முடிவுகளை எடுக்கவும் முடியாது.

எனவே, இந்த அரசாங்கம் அதுவாக விரும்பினாலும்கூட வெற்றிவாதத்தின் உச்சிக்கோபுரத்திலிருந்து இறங்கிவர முடியாது. வெற்றி பெற்றவர்களுக்குத் தலைமை தாங்கும்வரை மெய்யான அர்த்தத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் முடியாது. நல்லிணக்கம் ஏற்படாதவரை தோற்கடிக்கப்பட்ட தரப்பானது பிரதான நீரோட்டத்தில் இணைய மறுத்து விலகியே நிற்கும். அது எப்பொழுதும் வெளியாரின் உதவியோடு எதிர்த் தரப்பைத் தோற்கடிப்பது பற்றியோ அல்லது தண்டிப்பது பற்றியோதான் சிந்திக்கும். எவ்வளவுக்கெவ்வளவு நல்லிணக்கத்தின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நாடு வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்குமிடையே பிளவுண்டே இருக்கும். எவ்வளவுக்கெவ்வளவு பிளவு ஆழமாகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது வெளியாருக்கே வசதியாக அமையும். எவ்வளவுக்கெவ்வளவு வெளி அழுத்தம் கூடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த அரசாங்கத்தை அடிமட்ட சிங்கள மக்கள் பலப்படுத்துவார்கள். ஆகமொத்தம் இது ஒரு விசச் சூழல்.

வெற்றிக்கொண்டாட்டம் நடந்து முடிந்து சரியாக ஐந்தாவது நாளில் வெசாக் பண்டிகை வந்தது. வடக்கில் வெற்றி வளைவுகளும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்த ஏறக்குறைய அதே இடங்களில்தான் வெசாக் கூடுகளும் கட்டப்பட்டன. அல்லது வெற்றி வளைவுகளைக் கட்டிய அதேதரப்புத்தான் வெசாக் கூடுகளையும் கட்டியது. சிங்கள பௌத்த பண்பாட்டின் கலைச்செழுமையை வெளியார் கண்டுபிரமிக்கும் இடங்களில் வெசாக் கூடுகள் குறிப்பிடத்தக்கவை. ஆனால், வெற்றி வளைவுகளுக்கும் வெசாக் கூடுகளுக்கும் ஏதும் தொடர்பிருந்ததாகத் தெரியவில்லை. சரியாகச் சொன்னால் வெற்றிவளைவுகள் இருக்கும் இடத்தில் வெசாக் கூடுகள் இருக்க முடியாது. இந்த முரணிலிருந்துதான் இலங்கைத் தீவின் துயரமனைத்தும் ஊற்றெடுக்கின்றது.


இலங்கைத் தீவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்றால் அதற்கு ஆணைக்குழுக்கள் தேவையில்லை. வெளியார் வந்து வகுப்பெடுக்கவும் தேவையில்லை. அஹிம்சா மூர்த்தியான கௌதம புத்தரின் போதனைகளே போதும். நல்லிணக்கத்தை அங்கிருந்து தொடங்கினாலே போதும். அல்லது ஆகக்குறைந்தபட்சம் வெற்றிவளைவுகளும் வெசாக் கூடுகளும் ஏன் ஓரிடத்தில் இருக்க முடியாது என்ற முரண்பாட்டைக் கண்டுபிடித்தாலே போதும். அதுவே நல்லிணக்கத்தின் ஊற்றுக்கண்ணாய் அமைந்துவிடும். வெற்றிவிழாவும் வைகாசி விசாகமும் நெருங்கிய இடைவெளிக்குள் வரும் ஒருவாரத்தில் அரசியல் கட்டுரை ஒன்றை இப்படியாக ஆன்மீகப் போதனையில் கொண்டு வந்து முடிப்பதென்பதே ஒரு காலக்கொடுமைதான்.

குளோபல் நியூஸ் நெற்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# சிறுவர் அரங்கம்

471

## மாயக்கல்



முகாலயச் சக்கரவர்த்தியான ஜெகாங்கீர் தனது சுயசரிதமான துசுக்-கீ ஜெகாங்கிரி எனும் நூலில் இரும்பைத் தங்கமாக மாற்றும் மாயக்கல்லைப் பற்றி குறப்பிட்டு உள்ளார். அந்தக் காலத்தில் இந்த மாாயக்கல்லைப் பற்றி கதைகள் ஏராளமாக இருந்தன.

தென்னிந்தியாவில் மாண்டு என்ற ஊரில் ஒரு ஏழை விறகு வெட்டி இருந்தான். தினமும் காட்டுக்குச் சென்று மரம் வெட்டி வந்து, அதைக் கோடாலியினால் பிளந்து, விறகுகளாக்கி விற்பனை செய்து ஜீவனம் நடத்தி வந்தான். ஒரு முறை அவன் கிராமத்துப் பட்டறையில் ஒரு புதிய கோடாலி தயார் செய்து அதை எடுத்துக் கொண்டு விறகு வெட்டச் சென்றான். வழக்கப்படி ஒரு மரத்தை வெட்டிச்சாய்த்து, அதைத் தரையில் ஒரு கல்லின் மேல் கிடத்திப்பிளக்க முயற்சிக்கையில், கோடாலி குறி தவறிக் கல்லில் பட, அதன் நிறம் மாறி, மஞ்சளாக ஒளிவிட்டது. தன் கோடாலி தங்கமாக மாறியது கூட தெரியாத அந்தப் பாமரன் உடனே பட்டறைக்குச் சென்று கருமானிடம் (பட்டறைத் தொழிலாளி) புகார் செய்தான்.

கருமான் வீராசாமி மிகவும் கெட்டிக்காரன்! கோடாலி தற்செயலாக மாயக்கல்லின் மீது பட்டு விட்டதென்றும், அதனால் தங்கமாகி விட்டதென்றும் ஊகித்துக் கொண்டான். உடனே, "அடடா! தம்பி, இது என் தவறுதான்! கோடாலி இரும்பை நான் சரியாகக் காய்ச்சி அடிக்கவில்லை. அதனால் அது கெட்டு விட்டது. போனால் போகட்டும்! இதை எடுத்துக்கொண்டு உனக்கு புதிய கோடாலி தருகிறேன்." என்று சாமர்த்தியமாக கூறிவிட்டு, தங்கக் கோடாலியை தான் எடுத்துக்கொண்டு, ஒரு புதிய இரும்புக் கோடாலியை கொடுத்தான். அத்துடன் நில்லாமல், "தம்பி! காட்டில் உன்கோடாலி தவறிப்போய் ஏதோ ஒரு கல்லின்மீது பட்டவுடன் நிறம் மாறியது என்றாயே! அந்தக் கல்லைக் காட்டு!" என்று நைசாகப் பேசி, காட்டுக்கு சென்று அதைப் பார்த்தான்.

பிறகு, அதை எடுத்து தன்மடியில் கட்டிக் கொண்ட வீராசாமி, "தம்பி இந்தக் கல் இங்கிருந்தால் மீண்டும் உன்போல் வேறு யாருடைய கோடாலி யாவது இதன்மீது பட்டு சேதமாகி விடும். அதனால் இதை நான் வீட்டிற்கு எடுத்துச்செல்கிறேன்" என்று கல்லைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

வீட்டுக்குச் சென்றதும் முதற்காரியமாக அந்த மாயக்கல்லைக் கொண்டு பட்டறையிலிருந்த இரும்பு ஆயுதங்களையெல்லாம் தங்கமாக மாற்றினான். மேலும் நிறைய இரும்பு வாங்கி, அதனையும் தங்கமாக மாற்றினான். திடீரென மாண்டு ஊரிலேயே பயங்கரப் பணக்காரனாகிய அவன் நாளடைவில் மாண்டு நகரத்தையே விலைக்கு வாங்கி, அதன் மகாராஜாவாக மாறிவிட்டான்.

மாண்டு ராஜ்சிய எல்லையில் நர்மதை நதிபாய, அக்கரையில் பிரம்மபுரி ராஜ்சியம் இருந்தது. செல்வச்செழிப்பில் திளைத்த மாண்டுவின் மகளை, பிரம்மபுரி மன்னன் தன்னுடைய மருமகளாக்கிக் கொள்ள விரும்பினான். உடனே, அவன் முறைப்படி பெண்கேட்க வீராசாமியும் சம்மதித்தான். ஒரு நல்ல முகூர்த்தத்தில் வீராசாமியின் மகளுக்கும், பிரம்மபுரி இளவரசனுக்கும் திருமணம் இனிதே நடைபெற்றது.

திருமணத்திற்குப்பின் தன் மகளை பிரம்மபுரிக்கு ஏராளமான சீதனங்களுடன் அனுப்பிய வீராசாமி தன் மிகப்பெரிய பொக்கிஷமான மாயக்கல்லையும் ஒரு அழகான



பெட்டியில் வைத்து மகளிடம், "மகளே! இந்தப் பெட் டியை உன் மாமனாரி டம் கொடுத்து, இது தான் நான் அவருக்களிக்கும் மிகச்சிறந்த பரிசு என்று கூறு "என்ற வன், பிறகு, அந்த மாயக்கல்லின் மகத்துவத்தை அவளுக்கு விளக்கினான்.

தன் மருமகளை வரவேற்க, பிரம்மபுரி மன்னன் நர்மதை நதியின் அக்கரையில் தன் குடும்ப சகிதமாக காத்துக்கொண்டிருந்தான். அந்தக் கரையை அடைந்த மருமகளுக்கு நதிக்கரையிலே பலத்த வரவேற்பு அளிககப்பட்டது. அதனால் மனம் மகிழ்ந்துபோன வீராசாமி மகள், பிரம்மபுரிமன்னரைப் பார்த்து, "மாமா! இதோ நான் கொண்டு வந்துள்ள பிறந்த வீட்டு சீதனங்கள் அவ்வளவும் உங்களுக்குக் காணிக்கையாக்குகிறேன். அவற்றுள் தலைசிறந்த சீதனம் இதோ இந்த பெட்டியிலிருப்பதுதான் என்று சொல்லிவிட்டு," முதலில் அந்தப் பெட்டியை அளித்தாள்.

பெட்டியை ஆவலுடன் திறந்த பிரம்மபுரி மன்னன் அதனுள்ளிருந்த கல்லைக் கண்டதும் பயங்கரகோபம் அடைந்தான். தன்னை மாண்டு மன்னன் அவமானப்படுத்துவதாக எண்ணியவன் உடனே, அக்கல்லை ஆத்திரத்துடன் நர்மதையில் வீசி எறிந்தான்.

உடனே! ஐயோ! என்ன காரியம் செய்து விட்டீர்கள்! அது இரும்பைத் தங்கமாக்கும் மாயக்கல்! ஐயோ! முதலிலேயே இதை சொல்லியிருக்கக் கூடாதா? என்று புலம்பிய மன்னன், தன் ஆட்களை நர்மதைக்குள் குதித்து அந்த மாயக்கல்லைத் தேடச் சொன்னான். ஆனால், அது கிடைக்கவேயில்லை.

பின்னர் ஒரு காலத்தில், அக்பர் பிரம்மபுரி மீது படையெடுக்கையில், அவருடைய யானைப்படை நர்மதையைக் கடந்து செல்லும்போது, ஒரு யானை திடீரென் அடம்பிடிக்க, அதன் காலில் சங்கிலி கட்டி, அதை இழுத்து கரையைக் கடக்கச் செய்தனர். கரையை அடைந்த உடன், அதன் காலில் கட்டியிருந்த இரும்புச் சங்கிலி தங்கமாக மாறி இருந்ததாம். உடனே அந்த மாயக்கல்லைப் பற்றிக் கேள்விப்பட்டு இருந்த




அக்பர் தன் படைவீரர்களை நர்மதையில் குதித்து தேடச்சொன்னார். ஆனால், அந்த மாயக்கல் கிடைக்கவேயில்லை.

### அம்புலிமாமா கதைகள்

## மாறுதல் எதற்கு?

ஒரு முயல் ஒரு முறை பல் வைத்தியரான கொக்கிடம் போய் எனக்கு இரண்டு நல்லகோரைப் பற்கள் கட்டவேண்டும் என்று கேட்டது. கொக்கு தன்னிடமிருந்த கோரைப்பற்களை எடுத்துக் காட்டவே, முயல் சிங்கத்தினது பற்களை தேர்ந்தெடுத்து அவற்றைக் கட்டும்படி சொல்லியது. கொக்கும் அப்பற்களை கட்டிவிட்டது.



முயல் தான் பொருத்திக் கொண்ட சிங்கத்தின் பற்களோடு, மிடுக்கு நடை போட்டுக்கொண்டு காட்டினுள் நுழைந்தது. சிங்கத்தின் பற்களைக் கட்டிக் கொண்டதால், தன்னைப் பார்த்து எல்லா மிருகங்களும் பயந்து ஓடிவிடும் என்ற எண்ணமே அதற்கு அலாதியான மகிழ்ச்சியை அளித்தது. இனி காட்டில் தன்னை யாரும் ஒன்றும் செய்யமுடியாது என்ற இறுமாப்புடன் ராஜநடை போட்ட முயல் எதிரில் ஒரு ஓநாய் வந்தது. அவ்வளவுதான்! முயல் ஒரே ஓட்டமாக ஓடி புதரில் ஒளிந்து கொண்டது.

ஓநாய் போன பிறகு அது அங்கிருந்து கிளம்பி கொக்கிடம் போய் என்ன இது? இந்த கோரைப் பற்களை வைத்துக் கொண்டாலும் நான் ஓநாயைக் கண்டு பயப்பட வேண்டியிருக்கிறதே. அது என்னைப் பார்த்துப் பயப்படவில்லையே என்றது.

அதற்கு கொக்கு "மாறுதல் உன் பல்லை மாற்றினால் மட்டும் ஏற்பட்டு விடுமா? உன்னுடைய மனதில் மாறுதல் ஏற்படவேண்டும்" என்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின் விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை மூளாய், வட்டுக்கோட்டை, பொன்னாலைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை சனிக்கிழமை மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், விளான், பன்னாலை, காரைநகர், ஊர்காவற்துறை, தீவகம் முழுவதும், மானிப்பாய், ஈஞ்சை வைரவர் கோவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கரந்தன், நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபை பகுதி, ஸ்ரான்லி வீதி, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணிப் பிரதேசங்களிலும் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மானிப்பாய், ஈஞ்சை வைரவர் கோவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# காதல் மோகம் இருவரை காவு கொண்டது; ஒருவர் காயம்!

அநுராதபுரம் அபயபுரம் வீட்டுத்தொகுதியில் உள்ள வீடொன்றில் இரு பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 28 ஆம் திகதி இரவு குறித்த வீட்டுக்குச் சென்ற ஒரு குழுவினர் இப்பெண்கள் இருவரையும் கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்துள்ளதாகவும் இவ்வாறு உயிரிழந்தவர்கள் 62 வயதான தாய் மற்றும் 23 வயதுடைய மகள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர் .

சம்பவத்தில் படுகாயமடைந்த 62 வயதான தந்தை அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காதல் பிரச்சினை காரணமாகவே இக் கொலைகள் இடம் பெற்றுள்ளதாகவும் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## பொதுபலசேனாவை
# மத்திய நிலையத்திலிருந்து அகலுமாறு நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

பொதுபலசேனாவை மெத் செவன மத்திய நிலையத்திலிருந்து அகன்று செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுபலசேனா காலி- வங்சாவல பகுதியில் நடத்தி வந்த மெத் செவன எனப்படும் சமய ரீதியான மத்திய நிலையத்தை விட்டு செல்லுமாறு நீதிமன்றத்தால் உததரவிடப்பட்டுள்ளது.

காலி மேலதிக நீதிமன்ற நீதிவான் குணேந்திர முணசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வழக்கு விசாரணையின் போது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மெத் செவன மத்திய நிலையம் இயங்கி வந்த காணிக்கும் கட்டடத்திற்கும் உரிமை கோரும் ஒருவர் இதற்கு முன்னர் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவைத் தாக்கல் செய்த டி.ஜி.அசங்க அமரசிறி என்பவர் தமது காணியைப் பொதுபலசேனா அமைப்பினர் பலவந்தமாக அபகரித்து பயன்படுத்தி வருவதாக முறையிட்டுள்ளார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக பொதுபலசேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட மெத்செவனயில் பணிபுரிந்துவந்தநான்குபேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ-2)

# தேர்தல் முறையால் பயனில்லை; மக்கள் நம்பிக்கை இழப்பு
## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தேர்தல் முறைமையில் மக்களின் நம்பிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய தேர்தல் முறைகேட்டுச் சம்பவங்களால் மக்களுக்கு தேர்தலில் நம்பிக்கை குறைவடைந்துள்ளது.

அவர்கள் சுதந்திரமான முறையில் தங்களது வாக்குகளை அளிக்கக் கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டுமென அண்மையில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் நடத்திய சந்திப்பின் போது, சரத்பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

ஒரு தொகுதி வாக்காளர்கள், வாக்களிப்பில் கலந்து கொள்வதேயில்லை. வாக்களிப்பதனால் எந்த மாற்றமும் ஏற்படாது என்ற எண்ணக்கருவே இதற்கான காரணமாகும்.

17 ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டமை, தேர்தலை சுயாதீனமான முறையில் நடத்த பெரும் தடையாக அமைந்துள்ளதுடன் ஆளும் கட்சி தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றார். (அ-2)

# ஏ.ரி.எம்.அட்டை நிதிமோசடி; இலங்கையர்களே சூத்திரதாரிகள்

தமிழகத்தில் இடம்பெறுகின்ற ஏ.ரி.எம்.அட்டை ஊடான நிதி மோசடிகள் தொடர்பிலான பிரதான சூத்திரதாரிகள் என்று கருதப்படும் இரண்டு இலங்கையர்கள் தேடப்பட்டு வருவதாக தமிழக விசாரணைப் பிரிவு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஏ.ரி.எம்.அட்டை மோசடி தொடர்பில் நேற்று முன்தினம் மேலும் இரண்டு பேர் கோயம்புத்தூரில் வைத்து கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் இரண்டு இலங்கையர்கள் இருக்கின்றமை தெரியவந்துள்ளது. கனடா மற்றும் இந்தோனேசியா ஆகிய இடங்களில் வசிக்கும் இரண்டு இலங்கையரே இந்த செயற்பாடுகளின் சூத்திரதாரிகளென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இருவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கு இன்டர்போலின் உதவி கோரப்பட்டுள்ளது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.05 31

❖ *1223* - செங்க்கிஸ் கானின் மங்கோலியப் படைகள் கிப்சாக்கியரை சமரில் தோற்கடித்தன.

❖ *1889* - பென்சில்வேனியாவில் ஜோன்ஸ்டவுன் நகரில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததில் 2 ஆயிரத்து200 பேர் உயிரிழந்தனர்.

❖ *1900* - பிரித்தானியப் படைகள் ரொபேர்ட் பிரபு தலைமையில் ஜோகார்னஸ்பேக் நகரைக் கைப்பற்றின.

❖ *1902* - தென்னாபிரிக்காவில் இரண்டாவது போவர் போர் முடிவுற்றது. தென்னாபிரிக்கா பிரித்தானியாவின் முழுமையான ஆட்சியின் கீழ் வந்தது.

❖ *1910*-தென்னாபிரிக்க ஒன்றியம் அமைக்கப்பட்டது.

❖ *1911* - டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டது.

❖ *1921*- ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா, துல்சா என்ற இடத்தில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது 39 பேர் உயிரிழந்தனர்.

❖ *1931* -பாகிஸ்தானின் குவெட்டா என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

❖ *1942* - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் சிட்னி நகரைத் தாக்கின.

❖ *1961* - தென்னாபிரிக்கா பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகியது. தென்னாபிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது.

❖ *1962* - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

❖ *1970* - பெருவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் யூங்கே என்ற நகர் முழுமையாகப் புதையுண்டதில் 47 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

❖ *1997* - கனடாவில் நியூ பிரன்ஸ்விக்கையும் பிரின்ஸ் எட்வர்ட் தீவையும் இணைக்கும் கூட்டமைப்புப் பாலம் (Confederation Bridge) திறக்கப்பட்டது.

❖ *1981* -*யாழ்ப்பாணம் பொது நூலகம் நள்ளிரவு நேரம் இனம் தெரியாதோரால் எரிக்கப்பட்டது.*

❖ *2004* -வீரகேசரி பத்திரிகை நிருபரும் பத்திரிகையாளருமான ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

❖ *2005* - இலங்கையின் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தாலிப் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

❖ *2007* - டொரண்டோ தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

பிறப்புகள்

❖ *1048* - ஓமர் கையாம், பேர்சிய மெய்யியலாளர் (இ. *1131*)

❖ *1911* - கே. சி. எஸ். பணிக்கர், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓவியர் (இ. *1977*)

❖ *1931* - நீலாவணன், ஈழத்துக் கவிஞர் (இ. *1975*)

*இறப்புகள*

❖ *1809* -ஜோசப் ஹேடன், மேற்கத்தேய இசையறிஞர் (பி. *1732*)

❖ *1832* - கால்வா, பிரெஞ்சு கணிதவியலர் (பி. *1811*)

❖ *1987* - ஜான் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் (பி. *1937*)


❖ *2004*-ஐயாத்துரை நடேசன், ஈழத்துப் பத்திரிகையாளர்




யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு என்பது இலங்கை இனப் பிரச்சினையில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இந்நிகழ்வு 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் வன்முறைக் குழுவொன்றால் இடம்பெற்றது.

இது 20 ஆம் நூற்றாண்டின் இன, நூலழிப்புக்களில் ஒரு மிகப் பெரும் வன்முறையாகக் கருதப்படுகின்றது. இவ்வழிப்பு நேர்ந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பொதுநூலகம் கிட்டத்தட்ட 97 ஆயிரம் அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்தது. தமிழ் மக்கள் மத்தியில் அழியாவடு ஒன்றை ஏற்படுத்தி தமிழ்த் தேசியப் போக்குக்கு உரம் ஊட்டியது.

எரிக்கப்பட்ட பொது நூலகம்



யாழ். நூலகம் 1933 ஆம் ஆண்டில் இருந்து கட்டியெழுப்பப்பட்டு 1959 இல் முற்றாக வேலைகள் முடிவடைந்தது. முதலில் சிலரது தனிப்பட்ட சேகரிப்புகளுடன் நூலகம் ஆரம்பிக்கப்பட்டு மிக விரைவில் உள்ளூர் தமிழ் மக்களின் ஆதரவுடன் ஒரு முழு நூலகமானது. யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் தனிப்பட்டவர்களிடம் இருந்து வந்த பல நூல்கள் குறிப்பாக நூற்றாண்டுகள் பழைமையான ஓலைச் சுவடிகள், 1800 களில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட பல பத்திரிகைகளின் மூலம் பிரதிகள் போன்றவை இந்நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன. இன்று இந்தக் கட்டடம் மீளமைக்கப்பட்டு பதிய நூல்கள் சேர்க்கப்பட்டிருப்பினும் எரிந்துபோன பல நூல்களும் பழைமை வாய்ந்த கையெழுத்துப் பிரதிகளும் வேறு பல ஆவணங்களும் திரும்பப் பெறமுடியாதவை என்பது நிதர்சனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை அதிகாரங்களும் மகாநாயக்க தேரரின் விளக்கங்களும்!



நாடாளுமன்றத்தைவிட நாலாவது மாடிக்கே, தமிழ் அரசியல்வாதிகள் அடிக்கடி செல்கின்றார்கள். இதில் அதிக தடவைகள் நாலாவது மாடிக்கு அழைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி யார் என்று கேட்டால் அது நிச்சயமாக யாழ்.மாவட்ட எம்.பி. சிறிதரன் என்று சிறுவர்களும் கூறுவார்கள். இப்போது விசாரணை என்பது பரிணாமமடைந்து, கைதிகளாக வளர்ச்சி பெற்றுவிட்டன.

மே 18 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் உட்பட பலர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு பின்னர் நள்ளிரவில் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், கஜேந்திரன் மீதான விசாரணைகளை பயங்கரவாத குற்றப்பிரிவினர் இன்னமும் கைவிடவில்லை.

நில அபகரிப்பிற்கு எதிரான போராட்டங்களில் தீவிரமாகச் பங்குகொள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் முன்னெடுப்பாளர்களை நோக்கியே இவ்வாறான கைதுகளும் விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதைக் காணலாம்.

இவர்களால் ஒழுங்குபடுத்தப்படும் மக்கள் போராட்டங்களைத் திசைதிருப்புவதற்கும் வழக்குகளிலும் விசாரணைகளிலும் இவர்களை முடக்குவதற்கும் இத்தகைய அழுத்தங்களை புலனாய்வுப் பிரிவுகள் ஊடாக அரசு முன்னெடுப்பதாக சொல்லப்படுகிறது.

இவைதவிர, மக்களின் தகவல் அறியும் உரிமையின் அடையாளமாக இருக்கும் ஊடகங்கள் நில அபகரிப்பு குறித்தான செய்திகளை வெளியிட்டால் அவற்றினை ஊடகப் பிச்சைக்காரர்களின் பிதற்றல் என்று படைத்தரப்பு கருத்துச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

வடக்கிற்கு விஜயம் செய்யும் ஐ.நா. உயர் அதிகாரிகளுக்கும் கட்டளைத் தளபதிகளே காணி பறிப்பு குறித்தான விமர்சனங்களுக்கு விளக்கமளிக்கிறார்கள்.

வடக்கில் தமது சொந்தக்காணிகளை இழந்த 1471 பேர் அரசிற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன. இதன்மீதான விசாரணைகளை மே 27 வரைமுறையீட்டு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

வடக்கு- கிழக்கு நிர்வாகரீதியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. போட்ட வழக்கின் தீர்ப்பு விரைவாக வெளிவந்தது போல், காணித் தீர்ப்பு வரப்போவதில்லை. தனியார் நில உரிமைக்கும் இறைமைக்கும் இடையே பெரும் சாசனப் போராட்டமே நடைபெறப் போகிறது.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு என்கிற விவகாரம் மக்கள் இறைமையை மறுதலித்துவிடும். வரும் செய்திகளைப் பார்த்தால் அதிதீவிர பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள், காணி உரிமை தமிழர்கள் வசம் சென்றுவிடக்கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருப்பதை வெளிப்படுத்துகிறது.

இவைதவிர, கைதுகளுக்கு அப்பால் சிங்கள கடும்போக்குச் சங்கங்களான சேனாக்களும் உறுமயக்களும் காணி உரிமை வழங்கக்கூடாதென போர்க்கொடி உயர்த்துகின்றன.

13 ஆவது திருத்தச்சட்டத்தை இரத்துச்செய்யாமல் வடக்கில் தங்கியிருந்த சிங்களமக்களை மீளக் குடியமர்த்தாமல் வடமாகாணசபைத் தேர்தலை நடாத்த இடமளிக்கப் போவதில்லை என்பதோடு நாட்டை நேசிக்கும் அணியினர் ஒன்றுபட வேண்டும் என்கிறார் பொதுபல சேனாவின் செயலாளர் கலபோட்ட அத்தே ஞானசார தேரர்.

சிங்கள இறைமையைக் காப்பாற்ற எவ்வளவு உறுதியாக இருக்கிறார்கள், இந்தத் தேரர்கள் என்பது அதிசயமல்ல. தேர்தல் நடக்கவிருப்பதாக அறிவித்த பின்னர் இப்படிப்பேசாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

அதேவேளை இந்த விவகாரம் குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் ஞானதாச அமரசேகர கூறும்போது, அரசியலமைப்பிலுள்ள எந்தெந்த சரத்துக்கள் நீக்கப்பட வேண்டுமென விளக்கமாக முன்வைக்கின்றார்.

அதாவது, அரசியல் யாப்பிலுள்ள 154 ஏ (3), 154 ஏ (2), 154 ஜி(3) என்பதோடு மாகாணசபை பட்டியலின் 4.2 உறுப்புரை ஆகியன திருத்தியமைக்கப்பட்டு மாகாணசபைக்குரிய 6 அதிகாரங்கள் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்கிறார்.

ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அமைச்சர் டாட்லி சம்பிக்க ரணவக்க, இது குறித்து நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்றினைக் கொண்டுவரப் போவதாகக்கூறுவதோடு அதிகாரங்கள் நாடாளுமன்ற முறைமைக்குள் குவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

பொதுவான பார்வையில் சிங்கள உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாடாளுமன்றில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் வட-கிழக்கிற்கு பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதாக பலரும் நம்புகின்றார்கள்.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் மூலம் இந்த மாகாணசபை முறைமை புகுத்தப்பட்டதால் அதனை எதிர்ப்பது இந்தியாவின் ஆதரவினை இழக்க வேண்டிவரும் என்று ஒரு தரப்பும் அரசிடமிருந்து இதைவிட வேறெதையும் பெறமுடியாது. ஆகவே, கிடைப்பதைப்பெற்று அடிபணிந்து வாழ்வோம் என்று பிறிதொரு சாராரும் தமக்குரிய விளக்கங்களை அளிக்கின்றார்கள்.

ஆனால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்கவேண்டும், மாற்ற வேண்டும் அல்லது ஒழிக்க முடியாது என்கிற பல மாறுபட்ட கருத்துக்கள் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் விவாதிக்கப்படும்போது, இதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்கிறார் வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரீஸ்.

இதுதவிர வடக்கில் மாகாணசபைத்தேர்தல் நடந்தால் நாடு பிளவுபடும் என்பவர்களுக்கு, மல்வத்த மகாநாயக்க தேரர் அருமயான, யதார்த்தமான உண்மை ஒன்றினை புலப்படுத்தியுள்ள விவகாரத்தை குறிப்பிட்டாக வேண்டும். அவர், தன்னைச் சந்தித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவிற்கு கொடுத்த விளக்கம், 13ஆவது திருத்தச்சட்டம் அற்புதமானது என்பவர்களுக்கு சில வெளிச்சங்களை கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதியின் வசம் அனைத்து நிறைவேற்று அதிகாரங்களும் இருக்கும்போது, வடமாகாண சபைத்தேர்தல் குறித்து அஞ்சத் தேவையில்லை. அதுமட்டுமல்லாது, காணி, காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரங்கள் அதிபரிடம் இருப்பதால், 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரவேண்டும் என்று இப்போது பேசவேண்டாம், இதுதான் மல்வத்த மகாநாயக்க தேரர், தினேஷ் குணவர்த்தனாவிற்கு அருளிய உபதேசம்.

ஆனாலும் மாகாண நிதியத்தின் கட்டுப்பாடு என்பது ஜனாதிபதி, மற்றும் அவரால் நியமிக்கப்படும் ஆளுநர், அத்தோடு நாடாளுமன்றத்திடம் மட்டுமே கூட்டாக இருக்கும் என்பதை சொல்லமறந்து விட்டார் மகாநாயக்க தேரர். 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்த மோதல்கள் நிராகரிப்புகள், ஊடகப் பரப்பெங்கும் ஆழமாகப் பரவியுள்ள நிலையில், அரச காணிகளையும், பறிக்கப்படும் தனியார் நிலங்களையும் பன்னாட்டு கம்பனிகளுக்கு தாரைவார்க்கும் நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதாக செய்திகள் வருகின்றன.

இவ்வருட முதல் காலாண்டில் 218 மில்லியன் டொலர்களாக இருக்கும் வெளிநாட்டு நேரடி முதலீடு குறைவாக இருப்பதால், வருட இறுதிக்குள் 2 பில்லியனை எட்ட முடியாமல் போய்விடுமோ என்கிற அச்சத்தில் அரசு திணறுவதைக் காணலாம். 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்ட, வெளிநாட்டவரால் வாங்கப்படும் சொத்துக்களுக்கான 100 வீத வரியை மாற்றியமைக்கும் வகையில் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர அரசு திட்டமிடுகிறது.

பாரிய முதலீட்டாளர்கள் மந்திரி சபையின் அனுமதியுடன் காணிகளை வாங்கி, அதற்கு 5-10 சதவீத காணி வரியை செலுத்துவதோடு, அதனை குத்தகைக்குவிடும் உரிமையைப் பெறுகிறார்கள். வெளிநாட்டு அமைச்சு இதற்கான சுற்று நிரூபம் ஒன்றினை விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது, 10 மில்லியன் டொலர்களுக்குமேல் முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கே இச்சலுகை வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

ஆகவே, நில ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போராடும் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கைதுகளின் பின்புலம் இப்போது தெளிவாக புலப்படுகிறது.

அத்தோடு, காணிகளைக் கையாளும் உரிமை ஏன் மாகாண சபைகளுக்கு சிறிதளவேனும் இருக்கக்கூடாதென்பதன் அர்த்தமும் புரிகிறது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்காக... Little Albums

குழந்தைகளின் புகைப்படங்களை மாத்திரமன்றி அவர்களின் அன்றாட குறும்புத் தனங்களையும் இதர நிகழ்வுகளையும் பதிந்து வைக்க கைகொடுக்கிறது Little Albums என்னும் அருமையான இணைய தளம். எந்தச் செலவும் இல்லாமல் இதில் உங்கள் குழந்தைக்கான டயரி போன்ற அல்பத்தினை ஏற்படுத் தலாம்.

இதனை ஏற்படுத்த, குறிப்பிட்ட தளத்திற்குச் (www.littlealbums.com)சென்று, உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரியுடன் கணக்கு ஒன்றைத் தொடங்குங்கள். எல்லாம் சரியாக இருந்தால், உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு, அல்பம் உருவாக்கப்பட்ட இழையுடன் கூடிய அஞ்சல் செய்தி கிடைக்கும். தொடர்ந்து நீங்கள் அல்பம் தரும் தளம் சென்று கீழ் வலது பக்கத்தில் குழந்தையின் பெயர், பிறந்த நாள், போட்டோ மற்றும் சில தகவல்களைத் தர வேண்டும். அந்தக் குழந்தைக்கான அல்பம் உருவான பின்னர், நீங்கள் குழந்தையின் வாழ்க்கை நிகழ்வுகளைப் பதியலாம் புகைப்படங்களை இணைக்கலாம். இந்தக் குழந்தையுடன் இணைந்திருக்கும் இன்னொரு குழந்தையையும் இணைக்கலாம். சில நிகழ்வுகளை இணைத்த பின்னர், குழந்தைக்கான அல்பம் பகுதியை இயக்கலாம்.

இந்த தளத்திலிருந்து உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு வாரம் ஒரு முறை மெயில் அனுப்பப்படும். அதில் உங்கள் குழந்தை இந்த வாரம் என்ன செய்தது என்று கேட்டு பதில் அனுப்பும்படி கேட்கும். உடன், நீங்கள் அனுப்பும் பதிலைக் கொண்டு, அல்பம் அப்டேட் செய்யப்படும். பின்னர், நீங்கள் விரும்பும் நாளில் அல்பம் புக் உள்ள தளம் சென்று, உங்கள் குழந்தைக்கான அல்பம் புக்கினைக் காணலாம்.

இதன் மூலம் நாம் நம் குழந்தையின் வாழ்நாளில் ஏற்படும் சின்ன சின்ன நிகழ்வுகளைக் கூட பதிந்து ஒரு நூலாக அமைக்க முடியும். பின்னாளில், குழந்தை வளர்ந்து பெரியவனானவுடன், இதனை அவனிடம் காட்டலாம். இது அனைத்தும் இலவசமாகவே நமக்குக் கிடைக்கிறது என்பது இதன் தனிச்சிறப்பு. இத்தகைய அல்பம் புக் தருவது இந்த தளம் மட்டுமே எனத் தெரிகிறது.

# ஸ்கைப் பாவனையாளர்களே...!




வெளிநாட்டில் இருக்கும் ஒருவருடன் உரையாடுவதற்காக தற்போது பலரால் பயன்படுத்துவது ஸ்கைப் தான்.

இதில் இருக்கும் ஆபத்துகள் உண்மையில் பலருக்கு தெரிவதில்லை ஸ்கைப்பில் நீங்கள் உரையாடுவது பதிவு செய்யப்படுகின்றது.

மேலும், ஸ்கைப்பில் இருக்கும் வைரஸ் தான் இணையத்திலேயே மிக கொடுமையான வைரஸ். இந்தியாவில் ஸ்கைப் பயன்படுத்துவோர் பெற்றுவரும், கெடுதல் விளைவிக்கும் ஸ்பாம் மெயில் குறித்து எச்சரிக்கை கொடுத்து வந்தது.

தற்போது இந்த ஸ்பாம் வேகமாகப் பரவி வருவதாக அறிவித்துள்ளது. இந்த வைரஸ உங்கள் கணனியை என்னென்ன செய்யும் என்று தெரிந்தால் சற்று அதிர்ந்தே போய்விடுவீர்கள்.

ஸ்கைப் பயன்படுத்துவோரின் தொடர்பு முகவரி எளிதாக அவர்களைச் சென்றடையும்.


இதில் ஏதேனும் ஒரு லிங்க தரப்பட்டிருக்கும். இதில் கிளிக் செய்தால், கெடுதல் விளைவிக்கும் வைரஸ் புரோகிராம், கணனியில் வந்து விடும்.

பின்னர் இந்த புரோகிராம், கணனியில் தரப்படும் தனிப்பட்ட தகவல்களை, இணையம் மற்றும் வங்கி கணக்குகளுக்கான யூசர் நேம் மற்றும் பாஸ்வேட்களை, தொலைவில் உள்ள இன்னொரு சேவருக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறது.

அதனை இயக்குபவர், அங்கிருந்தே, உங்கள் கணனியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் இந்த வைரஸ் புரோகிராம் செயற்படும்.

இதனைத் தவிர்க்க, ஸ்கைப் கொண்டாக்ட் முகவரியில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து வரும் இன்ஸ்டண்ட் மெசேஜில் உள்ள லிங்க்கில் கிளிக் செய்திடக் கூடாது.

# நகரும் கழிப்பறை




உலகம் மிகவேகமாக ஓடிக்கொண்டிருக்கையில் அதற்கு ஈடுகொடுப்பதற்கு மனிதனும் நிமிடத்திற்கு நிமிடம் ஏதோவொன்றை செய்துகொண்டுதான் இருக்கின்றான். இடத்துக்கிடம் நகர்த்தக் கூடிய இயற்கை கடன்களை முடிக்கும் வகையிலான நடமாடும் கழிப்பறையை குழாய பொருத்துநர் ஒருவர் தயாரித்துள்ளார்.

இந்த கழிப்பறை உலகில் மிகவும் வேகமாக செயல்படும் கழிப்பறையாக இருக்கின்றது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 140 வலுகொண்ட மோட்டார் சைக்கிள் இயந்திரத்தினை கொண்டே இது தயாரிக்கப்பட்டுள்ளது. கொலின் பர்ஸ்என்ற 33 வயதுடைய நபரே இதனை உருவாக்கியுள்ளார். இதற்காக அவர் மூன்று மாதங்களை செலவிட்டுள்ளார்.

மிகவும் வேகமாக செயற்படக்கூடிய இந்த நடமாடும் கழிப்பறையில் நீரும் நிரப்பப்பட்டு காணப்படுகின்றது. நடமாடும் கழிப்பறையின் கைப்பிடியில் உள்ள பொத்தானை அழுத்தும்போது நிரப்பப்பட்டுள்ள நீர் இயல்பாகவே கழிப்பறையை சுத்தமாக்கும்.

இக் கழிப்பறை வாகனத்தில் செய்தித் தாள்களை கொழுவிக் கொள்வதற்கான வசதிகளும் காணப்படுகின்றன. ஸ்கூட்டர் ஒன்றினை அடிப்படையாக வும் அதற்கு மேலாக பல்கையிலான அடிப்பாகமும் இதற்கு பொருத்தப்பட் டுள்ளது. இதேவேளை, நான்கு மின் கியர்களை கைபிடிக்கு பொருத்தியுள்ளார்.

"இதனை செலுத்துவதற்கு பயமாக இருக்கிறது. கழிப்பறையை சுத்தம் செய்வதற்காக நிரப்பப்பட்டுள்ள நீரானது பாரம் நிறைந்ததாக காணப்படுகின்றது என்று பொருத்துநர் தெரிவித்துள்ளார்.

"கழிப்பறை இருக்கையும் வழுக்கும் தன்மை கூடியது. ஆனால் அதில் இருப்பது கடினமானது. நான் வேகமாக இதனை செலுத்தும்போதும் வழுக்கும் தன்மையை உணர்வேன்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கூகுளின் புதிய பணி




இனி வெளிநாட்டில் உள்ளவர் எளிதில் உங்களுக்கு கூகுளின் ஜிமெயில் மூலம் பணம் அனுப்பலாம். நாம் கூகுள் இணையத்தளம் மூலம் கடிதங்கள், விழா நிகழ்ச்சி பத்திரிகைகள், ஆவணங்கள், போட்டோக்கள் ஆகியவற்றை அனுப்பி கொண்டிருந்த காலம் போய் இப்போது கூகுள் மூலம் பணத்தையும் அனுப்பும் வசதி வந்து விட்டது. இதற்கு நீங்கள் ஜிமெயில் கணக்கு வைத்திருந்தால் போதுமானது

கூகுள் இணையத்தளம் சர்வதேச அளவில் புகழ்பெற்றதாக உள்ளது. ஈமெயிலுக்கு அதிகளவில் இடவசதி அளித்து புரட்சி ஏற்படுத்தியது இதுதான். பின்னர் அதிவேக செயற்பாடு மூலமும் வாடிக்கையாளர்களை பெரிதும் கவர்ந்தது. இதனால், பெரும்பாலான மக்கள் கூகுளின் ஜிமெயில் வாடிக்கையாளர்களாக உள்ளனர். இந்நிலையில், இந்நிறுவனம் இப்போது பணம் அனுப்பும் வசதியையும் அறிமுகம் செய்துள்ளது. சான்பிரான்சிஸ்கோவில் நடந்த ஐ.ஓ. கருத்தரங்கில் இதுதொடர்பான விபரங்களை கூகுள் நிறுவனம் அறிவித்தது.

முதற்கட்டமாக அமெரிக்காவில் இச்சேவை உடனடியாக அமுலுக்கு வருகிறது என்றும், விரைவில் உலகம் முழுவதும் இச்சேவை அறிமுகம் செய்யப்படும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. பணம் அனுப்ப விரும்புபவர்கள், கூகுள் இணையத் தளத்துடன் நேரடியாக தங்கள் வங்கிக் கணக்கை இணைத்து கொள்ளலாம் அல்லது கிரெடிட், டெபிட் கார்ட் மூலமும் பணத்தை அனுப்பலாம். இதற்கு சேவை கட்டணமாக 2.9 சதவீதம் வசூலிக்கப்படும் என்று கூகுள் தெரிவித்துள்ளது.

யாருக்கு பணம் அனுப்ப விரும்புகிறோமோ அவருக்கு ஈமெயில் கடிதம் எழுதி, அதை பேப்பர் கிளிப் குறியுடனும், டொலர் குறியுடனும் இணைக்க வேண்டும். பின்னர் எவ்வளவு தொகையை அனுப்ப விரும்புகிறோம் என்பதை குறிப்பிட்டு செண்ட் பட்டனை தட்டினால் அடுத்த முனைக்கு பணம் சென்று சேர்ந்து விடும்.

# ஏலத்தில் அப்பிளின் முதற் கணனி




அப்பிள்-1 கணனி நிறுவனம் ஸ்டீவ் ஜாப்ஸ் மற்றும் ஸ்டீவ் வோஸ்னியாக் ஆகியோரால் தொடங்கப்பட்டது.

இந்நிறுவனம் கடந்த 1976ஆம் ஆண்டில் முதன் முறையாக அப்பிள்-1 என்ற கணனியை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியது. அப்போது, இக்கணனி ரூ.36 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. மரத்தினால் ஆன கீ போர்டுடன் கூடிய இந்த கணனி உலகம் முழுவதும் பரபரப்புடன் பேசப்பட்டது.

இந்நிலையில் முதன்முதலில் தயாரிக்கப்பட்ட அப்பிள்-1 கணனி ஜேர்மனியில் உள்ள பிரகர் இல்லத்தில் ஏலம் விடப்பட்டது.

அந்த கணனியுடன், ஜாம்பவான்கள் ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக் ஆகியோர் கையெழுத்துடன் கூடிய கடிதமும் ஏலத்தில் விடப்பட்டது.

அவை ரூ.3.5 கோடிக்கு ஏலம் போனது. ஆனால், அதை ஏலம் எடுத்தவர் பெயர் வெளியிடப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் அதிரடி

## பயணிகள் பொதிகளை விட்டு தலைமறைவு

(கொழும்பு)

சென்னையிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 185 செய்மதி தொலைக் காட்சி வாங்கிகளையும் 150 கிலோ பெரிய வெங்காய விதைகளை யும் 250கருக்க லைப்பு மாத்திரைகளையும் கட்டுநாயக்க சுங்கப் பிரிவினர் நேற்று முன்தினம் கைப் பற்றியுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்துள்ளன.

சென்னையிலிருந்து நேற்று முன்தினம் காலை கொழும்பு பயணித்த ஜெட் எயார் வேஸ் விமானத்தில் வந்திறங்கிய இரண்டு பயணிகளின் பயணப் பொதிகளைச் சோத னையிட்ட போதே செய்மதி தொலைக்காட்சி வாங்கிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட் டது.

இதேபோன்று மற்றுமொரு பயணியின் பயணப் பொதியை சோதனையிட்ட போது அதிலிருந்து 250 கருக்கலைப்பு மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் விமானத்திலிருந்து வந்த பய ணப் பொதிகள் சில உரிமைகோரப்படாத நிலையில் இருப்பது கண்டு சோதனையிட்ட போது கோரப்படாத பொதிகளில் செய்மதி தொலைக்காட்சி வாங்கிகளும் அவற்றோடு 150 கிலோ எடை கொண்ட பெரிய வெங்காய விதைகளும் இருந்தமை கண்டுபிடிக் கப்பட்டன.

உடனடியாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் உஷார் நிலையில் வைக்கப்பட்ட னர்.

குறித்த விமான நிலையத்தில் சோதனை நடவடிக்கை கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டதும் செய்மதி தொலைக்காட்சி வாங்கிகள் மற்றும் பெரிய வெங்காய விதைகள் கொண்டு வந்த வர்கள் பயணப் பொதிகளை விமான நிலை யத்தினுள்ளேயே விட்டுவிட்டு தலைமறை வாகியிருந்தமை தெரியவந்துள்ளது.

பொருட்கள் அனைத்தையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட மொத்த செய்மதி தொலைக்காட்சி வாங்கிக ளின் பெறுமதி சுமார் ஒன்பது இலட்சத்து 25 ஆயிரம் ரூபா என்றும் இவற்றைக் கொண்டு வந்த இருவரும் அடிக்கடி தமிழ்நாடு சென்று வருபவர்கள் என்றும் சுங்கப் பிரிவினர் தெரி வித்தனர். (அ-2)

# சாவகச்சேரி பேராசிரியருக்கு வெள்ளை மாளிகையில் உயர் விருது



பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் அமெரிக்காவில் வெள்ளை மாளிகையால் வழங்கப்படும் உயர் விருதான Champion of Change விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள் ளார்.

நேற்று முன்தினம் காலை வெள்ளை மாளிகையில் இந்த விருது வழங்கல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

புலம் பெயர்ந்து அமெரிக்காவில் வாழும் வேற்று நாட்டவர் களில் முன்னோடியான கண்டுபிடிப்புக்களுக்காக வழங்க ப்படும் இந்த விருதைப் பெற்றவர்களுள் பேராசிரியர் எஸ். சிவானந்தன் ஒருவரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவருடன் சேர்ந்து 11 பேருக்கு நேற்று முன்தினம் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிக்காக்கோ இலினோஸ் பல்கலைக்கழகத்தின் இயற்பியல்துறைப் பேராசியராகக் கடமையாற்றும் இவர் இயற்பியலில் பல கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளதுடன், பல ஆய்வுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

தனது முயற்சியால் சிவானந்தன் ஆய்வு மையம் என்ற இயற்பியல் ஆய்வு கூடத்தை நிறுவிஅதனூடாக பல ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவி வருவதுடன் இலாப நோக்கற்ற பல ஆய்வு உதவிகளையும் மேற்கொண்டிருக்கிறார் .

இவரது அனுசரணையுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதீகவியற்றுறையினரும் சூரியக் கதிர் தொழில்நுட்பத்தின் கூட்டு ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சிவானந்தன் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புதிய திருத்தச்சட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

வாக்காளர் பதிவு தொடர்பான திருத்தச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள் ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் வகையில் வாக்காளர் பதிவு தொடர்பான திருத்தச்சட்டம் பாராளுமன்றில் எதிர்வரும் 6 ஆம் திகதி அவசர திருத்தச்சட்டமாக சமர்ப்பிக்கப்படவுள் ளது.இந்த உத்தேச திருத்தச்சட்டம் உச்ச நீதி மன்றிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமாகாணத்தின் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட ங்களைச் சேர்ந்த இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை உறுதி செய்யக் கூடிய வகை யில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள் ளது.

வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்ன தாக இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை உறுதி செய்யுமாறு தமிழ்- முஸ்லிம் கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு அமையவே திருத்தச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள் ளது.

இந்த திருத்தச் சட்டமானது ஓராண்டு காலத்திற்கு மட்டுமே அமுலில் இருக்கும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(அ-2)

# தமிழ் பேசும் பயிற்சி நெறியை பிக்குகள் பூர்த்தி செய்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியி யற் கல்லூரியில் பௌத்த பிக்குகள் குழு வினர் தமிழ்ப்பேச்சு பயிற்சியை பூர்த்தி செய் துள்ளனர்.

கல்வியமைச்சின் மொழிக் கல்வி பிரிவின் ஆலோசகர் உயன்கல்ல ஞானரத்ன தேர ரின் பங்களிப்புடன் குறித்த 3 வாரகால பயிற்சி நெறி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர பயிற்சி நெறிக் காலத்தில் குறித்த பௌத்த பிக்குகள் குடாநாட்டில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் கலந்து கொண்டதோடு பல கிராமங்களுக்கும் சென்று பொதுமக்களுடன் இணைந்து செயற்பாடுகளில் ஈடுபட்டிருந் தனர்.

பிறமொழிகளைக் கற்பதன் ஊடாக ஏற் படும் சமூக நல்லிணக்கம் மற்றும் திறன் அபிவிருத்தி என்பன நாட்டின் முன்னேற்ற த்தில் பங்களிப்பை செலுத்தும் என்று உயன் கல்ல ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜூன்மாத நடுப்பகுதி வரை காற்றுடன் கூடிய மழை

## வானிலை அவதான நிலையம்

(கொழும்பு)

நாட்டின் பல பிரதேசங்களிலும் தென் மேற்கு பருவப்பெயர்ச்சி ஆரம்பமாகியுள் ளதால் கடுங்காற்றுடன் கூடிய மழை பெய் யும் என எதிர்பார் க்கப்படுவதாக வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இம்மழை வீழ்ச்சி எதிர்வரும் ஜூன்மாத நடுப்பகுதிவரை இடம்பெ றலாம் என கடமை நேர அதிகாரி பபோதினி தெரிவித்தார்.

மேலும் கிழக்கு மற்றும் ஊவா மாகா ணங்களில் நண்பகல் அல் லது மாலை வேளைகளிலும் மத் திய மலைநாட்டின் மேற்கே அமை ந்துள்ள பிரதேசங்களில் இடைக் கிடையில் மழைபெய்யக்கூடும்.

மணித்தியாலத்திற்கு 20 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூ டிய காற்று புத்த ளத்திலிருந்து யாழ் ப்பாணத்திற்கூடாக திரு கோண மலை வரையிலும் மணித்தியால த்திற்கு 50 தொடக்கம் 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடிய காற்று காலியிலிருந்து அம் பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் வீசும் எனவும் அவ்வதிகாரி கூறினார். (அ-2)

# இலங்கையின் பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பு காரணமல்ல

## அனுர குமார எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தோன்றியிருக்கும் பிரச் சினைகளுக்கு அரசியலமைப்பு பிரதான காரணம் அல்ல என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல் கட்சிகள் அரசியலமைப்பு தொடர்பில் மாறுபட்ட யோசனைகளை உள் ளடக்கிய நிலையில் சட்ட மூலங்களை சமர்ப் பிப்பதனால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜாதிக ஹெல உறுமய 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர் பில் யோசனையொன்றை முன்வைத் துள்ளதாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்ததுடன் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்து செய்து தீர்வுகளை முன்வைப்பதே இதன் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்து செய்து அரச தலை வருக்கான 3 மாற்று முறைமைகளை அறி முகப்படுத்தி ஐக்கிய தேசிய கட்சி புதிய அரசி யலமைப்பு யோசனையொன்றை நேற்று முன்வைத்துள்ளது.

எவ்வாறாயினும் அரசியலமைப்பு அன்றி பொருளாதார முறைமையே மாறுபட வேண் டிய முக்கிய விடயம் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




அராலி கிழக்கு அம்பாள் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இக்கட்டடத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் முன்பள்ளி பாலர்கள் தேவாரம் இசைப்பதையும் விழாவில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக காரியங்கள் மூலம் கலாசார சீரழிவை தடுக்க முடியும்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி அருள்மிகு கந்தசாமி கோயில் கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பிரதம குருவாக யாழ்ப்பாணம் தொல்புரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானக் குருக்கள் சக்தி உபாசகர், சாதக இளவரசு, சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள் கும்பாபிஷேகத்தினை நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய பராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ஆலயங்கள் எங்கள் ஆத்மாக்களை நல்வழிப்படுத்தும் புனித இடங்கள் இன்று எம் இளைய தலைமுறை மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் கலாசாரச் சீரழிவுகள், வன்முறைகள், கீழ்ப்படிவின்மைகள் என்பன சரியான மத ரீதியான வழிகாட்டலின்மையாலேயே ஏற்படுகின்றன.

பெரியோரை மதித்து மூத்த தலைமுறைக்குக் கௌரவம் கொடுத்துப் பேணி வந்த எமினம் இன்று திட்டமிட்டுத் தன்னுடைய கலாசார ஓடுபாதையிலிருந்துவிலகிச்செல்ல வைக்கப்படுகின்றது.

இதற்கு எதிர்நீச்சல் போடும் வல்லமையினை ஆலயங்களே உருவாக்க வேண்டும்.

நான் பிறந்து வளர்ந்த மண்ணில் பேருந்து பிரயாணத்திற்காகக் காத்திருந்த ஆறுமுகம் சந்தி முருகனின் இரண்டாவது குடமுழுக்குக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்றார். (அ-4)

# வவு.சண்முகானந்தா வித்தியில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

(பூந்தோட்டம்)

வவுனியா கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரத்தில் இருந்து சுமார் 32 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள இக்கிராம பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் உள்ளன.

இப்பாடசாலையில் மிக முக்கியமான பாடங்களான விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் போன்றவற்றுக்கு ஆசிரியர்கள் இன்மையால் அப்பாடங்களில் மாணவர்கள் சித்தியடைய முடியாத நிலை தோன்றியுள்ளது.


இப்பாடசாலைக்கு பொருத்தமான ஆசிரியர்களை நியமிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பெற்றோர் பல தடவைகள் அதிபரைக் கோரியிருந்த போதிலும் இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்கள் கூட சிறந்த கல்வியைப் பெற்று ஒரு அரச உத்தியோகத்தை பெற முடியாது கூலித் தொழிலைச் செய்ய வேண்டிய ஒரு நிலை உருவாக வாய்ப்புள்ளது என பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இந்நிலையை கருத்திற் கொண்டு எமது பாடசாலைக்கு பொருத்தமான ஆசிரியர்களை நியமித்து கிராமப்புற பிள்ளைகளும் கல்வியில் முன்னேற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக்கிராம பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-266)

# ஆசிரியரை இடமாற்ற வேண்டாமென கோரி பெற்றோர் பகிஷ்கரிப்பு

## பொலிஸாரின் உறுதிமொழியை அடுத்து பகிஷ்கரிப்பு நிறைவுக்கு வந்தது



(மு/கொக்குத் தொடுவாய் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரான க.சபாஜிதன் அப்பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் ஒத்துழைப்பு வழங்கி சேவையாற்றி வருகின்றார்.

தற்போது குறித்த ஆசிரியருக்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்றதால் மாணவர் சமுதாயமும் ஆசிரியர்களும் இவரது சேவை தொடர்ந்தும் இருக்க வேண்டுமென கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளருக்கும் கோட்டக்கல்வி அதிகாரிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் க.சபாஜிதன் ஆசிரியர் எமது பாடசாலை நீராபிபிட்டியில் இயங்கி வந்ததில் இருந்து தற்போது எமது சொந்தக் கிராமத்திற்கு வந்தும் ஒரு சில ஆசிரியர்களைக் கொண்டு வீதியானது சேதமடைந்த நிலையில் இருந்தும் பேருந்து போக்குவரத்துக்குறைவாகவும் பாடசாலைக் கட்டடங்கள் இல்லாமல் இருந்த போது எந்தச் சிரமத்தையும் கூட பாராது மாணவர்களை நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்ற பெருந்தன்மையுடன் பாடசாலையைக் கட்டி எழுப்பி வந்த ஒரு உன்னதமான ஆசிரியர் ஆவார்.

இது மட்டுமன்றி எமது பிள்ளைகளுடன் நண்பனாகவே பழகி வருகின்ற ஒரு ஆசிரியர் இப்படியான இச்சிறந்த ஆசிரியரை எந்த நேரத்திலும் இழக்கக்கூடிய நிலையில் நாமில்லை. ஏன்னென்றால் எமது கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டதுமான பல ஆரிசியர்கள் இருந்தும் கூட எமது பிள்ளைகள் ஆசிரியர் பற்றாக்குறையாலும் மாலை நேர வகுப்புக்கள் இல்லாமலும் பின்தள்ளப்பட்டு வருகின்றார்கள்.

ஆனால், சபாஜிதன் ஆசிரியர் தனது பிள்ளைகள், தனது கிராமம் என்ற உயர்ந்த மனதுடன் எமது பாடசாலையை கட்டியெழுப்பி வருகின்றார். இல்ல விளையாட்டை பாடசாலை நிதி எதுவுமின்றி மிகச் சிறப்பான முறையில் நடத்தியவர்.

எனவே, இப்படியான இச்சிறந்த ஆசிரியரை தொடர்ந்து சேவையாற்ற தங்களின் அனுமதி வேண்டுமென அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாசிரியர் மீது போலிக் குற்றச் சாட்டுக்களை சுமத்தியே அவரை அப் பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு இடமாற்றியுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர் மற்றும் மாணவர்கள் தெரிவித்தனர். (அ-2-267)

# முல்லைத்தீவு மகா வித்தியில் கட்டுரை, பேச்சு போட்டிகள்

(முல்லைத்தீவு)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாப் போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய போட்டி நிலையம் மாற்றப்பட்டுள்ளதாக போட்டிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த பாடசாலைகளுக்கான போட்டிகள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறாதென்றும் அவை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலேயே நடைபெறும் என்றும் போட்டிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாப் போட்டியின் கீழ்ப்பிரிவுப் போட்டியாளர்களுக்குரிய நேரமும் மாற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டுவிழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கீழ்ப்பிரிவு (தரம் 04,05) மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் மாத்திரம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும். ஏனைய போட்டிகள் முன்பு அறிவித்ததன் பிரகாரம் 9 மணிக்கு இடம்பெறும் என போட்டிச் செயலர் அறிவித்துள்ளார்.

மாகாண மட்டத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பயிற்சித் தேர்வு இடம்பெறுவதாலேயே இம்மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவரால் தெரிவிக்கப்படுகின்றது. (அ-6)

# காற்றில் பறக்கின்றன தற்காலிக வீடுகள்

(மல்லாவி)

வன்னியில் பலமாக வீசும் பருவக்காற்றால் மக்களது தற்காலிக வீட்டுக் கூரைகள் காற்றில் பறக்கும் சம்பவங்களுடன் பயன் தரும் வாழை மரங்களும் முறிந்து வீழ்ந்தமையால் தாம் பாதிக்கப்படுவதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடப்பெயர்வின் பின் பல வேறு இடர்களுக்கு மத்தியில் வாழும் எம்மை, இயற்கையின் சீற்றம் மேலும் சீரழித்து வைத்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டுக் கூரைகள் காற்றால் பிடுங்கி எறியப்படுவதுடன் வாழை மரங்கள் குலைகளுடன் முறிந்து வீழ்வதால் பொருளாதார ரீதியில் தாம் பெரும் இழப்பை சந்தித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-15)




# பேருந்து சேவை இடைநிறுத்தம்; பயணிகள் பெரும் அந்தரிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா பெரிய தம்பனைக்காக பேருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீள்குடியேற்ற கிராமமான பெரிய தம்பனைக்கு வவுனியா இலங்கை போக்குவரத்து சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த பேருந்து சேவைகள் கடந்த சில தினங்களாக எவ்வித முன்னறிவித்தலும் இன்றி இடைநிறுத்தப்பட்டுள்ளன. இப்போது சேவைகள் இடைநிறுத்தப்பட்டமையால் வவுனியா நகரத்தில் இருந்து கிராமப்பாடசாலைகளுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் வருகை தர முடியாத நிலை, கிராமத்தில் நோயாளர்கள் உட்பட பொதுமக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்கு வவுனியா நகரத்துக்கு செல்ல முடியாத நிலை விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை போன்றன ஏற்பட்டுள்ளன.

இந்நிலைகளைக் கருத்தில் கொண்டு இடைநிறுத்தப்பட்டுள்ள பேருந்து சேவையை உடனடியாக ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-266)

# 10 இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளி அமைப்பு

(சிவநகர்)

கனடா மனிதநேய அமைப்பு(அன்புநெறி) கழகத்தினரால் 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட உருத்திரபுரம் கானகன் முன்பள்ளி நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி இதுவரை இயங்கி வந்த முன்பள்ளிக்கு இந்தக்கட்டடம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இங்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு இலவச மாலை நேர வகுப்புகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-254)

# தர்மபுரம் பொதுமயானத்தை கவனத்திலெடுக்க வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் பொதுமயானத்தில் அமைந்திருக்கும் இளைப்பாறு மண்டபம், கிணறு என்பன புனரமைக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த பொதுமயானத்திற்கு இறுதிக் கிரியைக்காக செல்வோர் இளைப்பாறு மண்டபம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

அத்துடன் அங்குள்ள கிணறும் சுத்திகரிக்கப்படாது பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளது.

இதனால் இங்கு செல்வோர் நீரைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து இளைப்பாறு மண்டபத்தை புனரமைத்தும் கிணற்றை சுத்தம் செய்தும் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் கிழக்கில் மீண்டும் இனக்கலவரம்



(லஷியோ)

மியன்மாரின் கிழக்குப் பகுதியில் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பை அதிகரிக்கக்கோரி அரசிடம் முறையிட்டுள்ளனர்.

அங்குள்ள அநாதை இல்லம், மசூதி மற்றும் சில கடைகள், போராளிகளால் நேற்று முன்தினம் தீயிடப்பட்டன. இக்கலவரங்களுக்குப்பின் மக்களை அமைதி காக்குமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தபின், நாட்டின் மறுமலர்ச்சிக்காகவும் பொருளாதார மேன்மைக்காகவும் அரசு செயலாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் நடைபெறும் இந்த இனக்கலவரங்கள் அதனைத் தடைப்படுத்துவதாக உள்ளன.

வன்முறையாளர் கும்பல் கையில் தடிகளுடன் ஷேன் மாகாணத்தில் உள்ள லஷியோ நகரில் சுற்றிக்கொண்டிருப்பதாக மக்கள் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளனர்.

உள்ளூரில் ஒரு பௌத்த பெண்மணியைத் தாக்கியதன் விளைவாக இக் கலவரம் எழுந்ததாக குறிப்பிட்ட பொலிஸார் இரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தனர். அதனால், நிலைமை கட்டுக்குள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

ஆயினும், 30 பேருக்கும் மேற்பட்ட கும்பல் ஒன்று முஸ்லிம் எதிர்ப்பு கோஷங்களை எழுப்பிக் கொண்டு மோட்டார் சைக்கிள்களில் சுற்றிக்கொண்டிருந்ததால், அன்று மாலை வரை அந்தப் பகுதியில் இறுக்கமான சூழ்நிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் சீர்திருத்தம் அவசியமானது

## ஜப்பான்-இந்தியா வலியுறுத்து



ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று இந்தியாவும் ஜப்பானும் வலியுறுத்தியுள்ளன. இதற்காகத் தொடர்ந்து இணைந்து பணியாற்றவும் முடிவு செய்துள்ளன.

ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் நிரந்தர உறுப்பினராக இந்தியாவும் ஜப்பானும் விரும்புகின்றன.

இந்நிலையில், டோக்கியோவில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் நேற்று முன்தினம் சந்தித்தபோது இவ்விவகாரம் குறித்து விவாதித்தனர்.

இதன்பின் இரு தலைவர்களும் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டனர். அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

ஐ.நா. சபையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக இரு நாடுகள் இடையேயும் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக இரு தரப்பும் ஆண்டுக்கு இரு முறை கலந்தாலோசனை செய்வதென இரு நாட்டு தலைவர்களும் முடிவு செய்துள்ளனர். ஐ.நா. பாதுகாப்பு பேரவையை விரிவாக்குவது உட்பட ஐ.நாவில் சீர்திருத்தங்களை விரைவாக மேற்கொள்வதற்காகப் பாடுபடுவது என்ற தங்கள் உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

சமகால அரசியல் யதார்த்த நிலைமைகளைப் பிரதிபலிப்பதற்காக இந்தச் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியம். குறிப்பாக ஜி-4 நாடுகளின் அமைப்பு மூலம் இந்த முயற்சிகள் மேற்கொள்ள இருவரும் ஒப்புக் கொண்டனர்.

பாதுகாப்புக் பேரவையில் முக்கியமான நாடுகளுக்கு மேலும் பிரதிநிதித்துவம் அளிக்கவும், அந்த அமைப்பை மேலும் நம்பகத்தன்மை வாய்ந்ததாக மாற்றவும் இந்தச் சீர்திருத்தங்கள் அவசியம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி-4 என்ற அமைப்பை உருவாக்கியுள்ள பிரேசில், ஜெர்மனி, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஐ.நா.பாதுகாப்பு பேரவையில் தாங்கள் இடம்பெறுவதற்காக ஒன்றை ஒன்று ஆதரிப்பது என்று ஏற்கனவே முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை**

இதனிடையே, இந்திய-ஜப்பான் பிரதமர்களின் கூட்டறிக்கையில் இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்தவும், கடல்சார் பாதுகாப்பு விவகாரத்தில் மேலும் ஒத்துழைப்பை விரிவாக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டங்களின்படி கடற்பயணச் சுதந்திரம் மற்றும் தடையற்ற கடல் வழி வர்த்தகம் ஆகியவற்றைப் பராமரிக்க இந்தியாவும் ஜப்பானும் உறுதிபூண்டுள்ளதை இரு நாட்டுப் பிரதமர்களும் வலியுறுத்தினர்.

கடற்கொள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் உள்பட இருதரப்பு கூட்டு கடற்படைப் பயிற்சிகளும் நடைபெற்று வருவதை இரு பிரதமர்களும் சுட்டிக் காட்டினர். (அ-2)

# பாரதீய ஜனதா குழுவினர் இலங்கைக்கு பயணிப்பர்

(புதுடில்லி)

பாரதீய ஜனதா குழுவினர் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

பாரதீய ஜனதா துணைத் தலைவரும் டில்லி மேல் சபை எம்.பி.யுமான ரவிசங்கர் பிரசாத் தலைமையில் 3 பேர் கொண்ட குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி அவர்கள் டில்லியில் இருந்து புறப்பட்டு கொழும்புக்கு வரவுள்ளனர். அங்கு அவர்கள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இராணுவ செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரை சந்திக்கவுள்ளனர்.

இலங்கையின் வடக்கில் உள்ள தமிழர் பகுதிகளுக்கும் இவர்கள் சென்று அங்கு தமிழர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளையும்பார்வையிடத் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் தேசிய கூட்டணி கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டபோது, பாரதீய ஜனதா குழு வருகை பற்றி தங்களுக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றார்.

இதேபோல் இந்திய தூதரக அதிகாரிகளின வருகை அதிகாரபூர்வமானது அல்ல, தனிப்பட்ட வருகையாக இருக்கலாம் என்று தெரிவித்தனர்.


ஆனால், கொழும்பில் ஆர்.எஸ். அமைப்பும், பண்டாரநாயக்க சர்வதேச கல்வி நிறுவனமும் இணைந்து ராம் மாதவ் என்பவர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் பங்கேற்க அவர்கள் வருகிறார்கள் என்பது மட்டும் உறுதி செய்யப்பட்டது. (அ-2)

## எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து குதித்து ரஷ்ய வீரர் சாதனை

உலகின் மிகவும் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து குதித்து ரஷ்ய வீரர் சாதனை படைத்துள்ளார்.

இந்த சிகரத்தை அடைந்து எட்மண்ட் ஹிலாரி, டென்சிங் நார்கே ஆகியோர் முதன்முறையாக கடந்த 1953ஆம் ஆண்டு மே 29ஆம் திகதி சாதனைப் படைத்தனர்.


இதன்60ஆவது ஆண்டை கொண்டாடும் வகையில் ரஷ்யாவைச் சேர்ந்த வெலேரி ரூசோ(48) என்ற சாகச வீரர் எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து கீழே குதித்து சாதனை படைத்தார். இதற்கென பிரத்தியேக இறக்கை போன்ற உபகரணங்கள் மூலம் நடுவானில்பறவை போல்பறந்து இறுதியில் தகுந்த பாதுகாப்புடன் தரையிறங்கி சாதனை படைத்தார். (அ-2)



ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவும், பிரதமர் மன்மோகன் சிங்கும் டோக்கியோ நகரில் முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு ஆவணங்களை பரிமாறிக் கொண்டதைப் படத்தில் காணலாம்

# காமா கதிர்கள் பூமியை தாக்கும்

## அமெ. விஞ்ஞானிகள் தகவல்



(வோஷிங்டன்)

காமா கதிர்கள் பூமியை தாக்கும் அபாயம் உள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிதகவல்வெளியிட்டுள்ளார்.

அண்டத்தில் பல ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றான உல்ப்ரயேட் 104 என்ற பெயரிடப்பட்ட நட்சத்திரம் பூமியிலிருந்து 8 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ளது. இது 5 இலட்சம் ஆண்டுகளில் எந்த நேரத்திலும் தீப்பிழம்பாக வெடித்துச் சிதறலாம் என்று அமெரிக்க விஞ்ஞானி கிராண்ட் ஹில் தெரிவித்துள்ளார்.

அப்படி வெடிக்கும் போது, அதிலிருந்து தீங்கு விளைவிக்கக்கூடிய காமா கதிர்கள் வெளியேறும். அதன் கதிரியக்க வேகத்தைப் பொறுத்து பூமியின் மீதான தாக்கமும் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதனால் வளிமண்டலத்திலுள்ள ஓசோன் படலத்தில் நான்கில் ஒரு பகுதி அழிந்து விடும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் விளைவாக பூமியை அடையும் புற ஊதாக் கதிர்களின் அளவில் 50 சதவீதம் அதிகரிக்கும். பூமியின் வெப்ப நிலையும் உயரும் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

# பேரனின் உயிரைக் காக்க பரசூட்டிலிருந்து குதித்த தாத்தா

பேரனின் மருத்துவ செலவுக்கு நிதி திரட்ட தாத்தா பரசூட்டில் இருந்து குதித்துள்ளார்.

ஒஹாயோவைச் சேர்ந்த கிளாரன்ஸ்டர்னர் என்ற 87 வயது முதியவர் நுரையீரல் நோயால் அவதிப்படும் தனது 10 மாத கொள்ளுப் பேரனின் மருத்துவச் செலவுக்கு நிதி திரட்ட பரசூட்டில் இருந்து குதித்து சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் தென்மேற்கு ஒஹாயோவில் உள்ள டி பேர் பீல்டைச் சேர்ந்த குறித்த வயோதிபர் இரண்டாம் உலகப் போரில் கலந்து கொண்ட விமானப்படை வீரர் ஆவார். அவரது 10 மாத பேரக் குழந்தை ஜூலியான் கவுச்லியானுக்கு நுரையீரல் நோய் உள்ளமையால் கொலம்பசில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அவனுக்கு நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. பேரனின் மருத்துவச் செலவுக்கு நிதி திரட்ட கிளாரன்ஸ் கடந்த சனிக்கிழமை பரசூட்டில் இருந்து குதித்து சாதனை படைத்தார். முன்னதாக அவர் தன்னுடைய 85 ஆவது வயதிலும் பரசூட்டில் இருந்து குதித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு அவர் 1944-47 ஜப்பானில் இராணுவ வீரராக இருக்கையில் இறுதியாக பரசூட்டில் இருந்து குதித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற நட்பு ஒருபடிக்கட்டாக அமையட்டும்.

– ஆபிரிக்க பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு ஓர் அஞ்சலிப் பாராயணம்

பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தி காற்றோடு கலந்தபோது எங்கள் இதயமும் ஏங்கிக் கொண்டது.

ஏ ! இதயமே ! சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததற்காக நீ ! ஏன் பதறிக் கொள்கிறாய். அவர்கள் எங்களுக்கு எதிரானவர்கள் அல்லவா?

நாங்கள் வன்னியில் வதைபட்டபோது சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரேனும் எங்களுக்காக பரிந்து பேசியதுண்டா?

அல்லது இலங்கை பாராளுமன்றத்தில் வன்னிப் போரில் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்காக ஒரு நிமிடமேனும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தப்பட்டதா? எதுவுமே இல்லாத போது நீ ! எதற்காக டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவுக்காகக் கலங்குகிறாய் என்று என் இதயத்தைக் கேட்டேன்.

அதற்கு இதயம் விக்கித்தபடியே பதிலளித்தது.

என் ஆருயிர் நண்பா? உனக்குப் புத்தி என்றும் அறிவு என்றும் மூளை என்றும் பெயர் சூட்டிக் கொண்டாலும் உன்னிடம் மறதியும் மமதையும் மெய்ஞ்ஞானம் உணராப் பேதமையும் சந்தர்ப்பவாதமும் இருப்பதால், நீவிர் செய்ந்நன்றி மறந்து விடலாம்.

ஆனால்நான் அப்படிமறந்துவிட முடியாது. இதயம் என்பது தனித்து குருதிச் சுற்றோட்டத்துடன் மட்டும் தொடர்புடையதென்று நினைத்து விடக் கூடாது.

மாறாக மற்றவர்களின் துன்பம் கண்டு துடிதுடித்து போவதும் மற்றவர்களின் இழப்புக் கண்டு ஏங்குவதும் என் செயலே.

அதேநேரம் நிலைகெட்ட மானிடர்களின் செயல் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாமல் படபடப்பதுவும் நானே.

அந்தவகையில் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன என்ற மனிதனை நினைத்துப் பார்க்கிறேன்.

சிங்கள இனத்தை சேர்ந்தவராக இருந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மனித நேயத்துடன் நோக்கியவர்.

சிங்கள – தமிழ் இன முரண்பாடுகள் களையப்பட வேண்டும் என்பதற்காக பாடுபட்டவர். வன்னி பெரும் நிலப்பரப்பில் மக்கள் மருத்துவ வசதிகள் இன்றி அவதிப்பட்டபோது டாக்டர் ஜயலத் ஜயவர்தன ஆற்றிய உதவி மிகவும் உயர்ந்தது ; உன்னதமானது.

தமிழ் மக்களுடன் அவர் கொண்டிருந்த நல் உறவின் காரணமாக அவரை படைத்தரப்பினர் விசாரணை செய்த சம்பவங்களும் உண்டு.

இனவாதத்தை பேசுவதன் மூலமாக தம்மை சிங்கள தேசத்தின் மைந்தர்கள் என அடையாளப்படுத்தும் இன்றைய கால கட்டத்தில்,

இரக்கமும் இதயமும் கொண்ட டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் இழப்பு தாங்க முடியாதது. அவருக்கு எங்கள் அஞ்சலி என்று இதயம் குறிப்பிட்ட போது, கண்களும் கலங்கிக் கொண்டன.

இதய மொழியில் டாக்டர் ஜயலத்துக்கு அஞ்சலி பாராயணம் பாடுகின்றோம் பக்குவமாய் இறையடி சேர.

# தமிழர்களுக்காக குரல் கொடுத்த சிங்களப்புலி மறைந்து விட்டது

## மனோ கணேசன் இரங்கல்

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களுக்கு, பெரும்பான்மை சகோதர இனத்தின் மத்தியில் புதிய நண்பர்கள் உருவாகாத நிலையில், புதிது புதிதாக இனவாத பகைமை பேசுபவர்கள்தான் நாள்தோறும் தோன்றி வருகிறார்கள்.

இந்நிலையில்நம்மத்தியில்செயற்பட்டு, வாழ்ந்து இருந்த தமிழ் பேசும் மக்களின் நண்பர் மருத்துவ கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவு, இன்றைய இனவாத சூழ்நிலையில் மிகப்பெரும் இழப்பாக என்னால் உணர முடிகின்றது.

அவரது மறைவு என் மனதை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றிருந்த வேளையில் மரணமடைந்த ஜயலத் ஜயவர்த்தன எம்.பியின் மறைவு தொடர்பாக மனோகணேசன்மேலும்கூறியதாவது.

2007-ம் வருடத்தில் என்னை சிஐடியினர் விசாரணை என்ற பெயரில் ஒன்பது மணித்தியாலயம் தடுத்து வைத்து கைது செய்ய முயற்சித்த வேளையில் என்னோடு இறுதிவரை விசாரணையின் போது கூட இருந்து பொலிஸ் அதிகாரிகளுடன் சண்டையிட்டு என்னை மீட்டு வந்தவர், ஜயலத் ஜயவர்த்தன ஆகும். ஆகவே நான் தனிப்பட்ட முறையில், ஜயலத் ஜயவர்த்தனவுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

கொழும்பில் தமிழர்கள் நாளாந்தம்வெள்ளைவான்களில் கடத்தப்பட்டு, கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்ட, கோர யுத்தம் நடைபெற்ற காலமாக அப்போதைய காலகட்டம் இருந்தது. இன்றைய காலத்தைவிட அன்று நாளாந்த நிலைமைகள் கடும் மோசமாக இருந்தன.

எனது கட்சி உறுப்பினர்கள் கூட என்னுடன் தங்களை அடையாளம் காட்டிக் கொள்வதற்கு தயங்கிய அந்த காலகட்டத்தில், ஜயலத் ஜயவர்த்தன என்னுடன் இணைந்து நின்று சிங்கள புலி என்ற பட்டத்தைச் சுமந்தார்.

அவரது இந்த தமிழ் பேசும் மக்கள் சார்பு கொள்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே ஒரு பிரிவினர் அவர் மீது விமர்சனங்களை முன்வைத்த வேளையிலும் ஜயலத் ஜயவர்த்தன தன் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளவில்லை.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆழ்ந்த இரங்கலை ஜயலத் ஜயவர்த்தனவின்குடும்ப அங்கத்தவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (எ-11)

# மாவீரர் துயிலும் இல்லத்தை பயன்படுத்தும் எண்ணம் இல்லை

## இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடத்தைப் பயன்படுத்தும் எண்ணம் இலங்கை மின்சார சபைக்கு இல்லை என அதன் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபைக்கு கிளிநொச்சிமாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணி ஒதுக்கப்படவில்லை. மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அப்பால் உள்ள காணியே ஒதுக்கப்பட்டுள்ளது என பிரதிப்பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

தங்களது பத்திரிகையின் 29.05.2013 புதன்கிழமை பதிப்பின் இரண்டாம் பக்கத்தில் மேற்படி தலைப்பில் வெளியிடப்பட்ட செய்தி எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

"கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் இலங்கை மின்சார சபைக்கு ஒதுக்கம்" என்ற செய்தி எனக்கு மிகுந்த வேதனை உண்டு பண்ணியுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிலப்பகுதி மாவீரர் இல்லத்திற்குரிய நிலத்தின் எல்லைக்கு அப்பால் உள்ளதாகும்.

இலங்கை மின்சார சபைக்கு, மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடத்தை தனது தேவைகளுக்கு பயன்படுத்தும் எண்ணம் எந்த காலத்திலும் இருந்ததும் இல்லை. இனிமேலும் இருக்காது என்பதை அடக்கத்துடன் கூறிக் கொள்கிறேன்.

மேற்படி செய்தி பொது மக்கள் மனதில் இலங்கை மின்சார சபை பற்றி தப்பெண்ணத்தை ஏற்படுத்தும் என்பதாலும், சபையின் நன்மதிப்புக்கு களங்கத்தை ஏற்படுத்துமாகையாலும் உரிய முக்கியத்துவம் கொடுத்து உண்மை நிலையை பொது மக்களுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (எ)



## வெள்ளி நற்சிந்தனை

12

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

ஒழுக்கம் மனிதனுக்குச் சிறப்பைத் தரும். அது விழுப்பம் தருவதால் உயிரைக் காட்டிலும் சிறப்பாகப் பேணப்பட வேண்டுமென வள்ளுவரும் கூறியுள்ளார். இவ்வொழுக்க நிலையில் பிற பெண்களை நயத்தல் இழிவானது எனக் கருதப்பட்டது. ஆண்களின் இப் பலவீனத்தைக் காலங்காலமாகப் பல்வேறு இலக்கியங்களும் எடுத்துக்காட்டியுள்ளன. பக்தி இலக்கியத்திலும் மணிவாசகர் இவ்வொழுக்க நிலையைப் பாடியுள்ளார். ஆனால் ஏனைய இலக்கியப் பதிவுகளைவிட மணிவாசகருடைய பதிவு வேறுபட்டது. தன்னுடைய ஒழுக்கப் பிறழ்வாக தன்னுடைய உணர்வாக அவர் பாடியுள்ளார்.

"கொழுமணியேர் நகையார் கொங்கைக் குன்றிடைச் சென்று
விழுமடியேனை விடுதி கண்டாய்"

கொழுவிய முத்தையொத்த வெண்மையான பற்களையுடைய மகளிருடைய இளங்கொங்கைகளாகிய சிறிய மலைகளிடத்துச் சென்று அறிவு இழந்து விழுகின்ற அடியேனை நீ கைவிடாதிருக்கவேண்டும் என்பதே மணிவாசகருடைய சிறப்பு வேண்டுதலாக உள்ளது. காமத்தால் அறிவிழந்து இளம்பெண்களையே நாடும் தன் மன [illegible] மறைக்கவில்லை. இளம்பெண் பற்றிய அவருடைய குறிப்பே அதற்குச் சான்றாக உள்ளது.

எனினும் இறைவனைக் குருவடிவாகக் கண்டபோது தன்னுள் ஏற்பட்ட மாற்றத்தை மணிவாசகர் நன்குணர்கிறார். அங்கே கண்ட அடியார் கூட்டத்தையும் அடிக்கடி நினைத்துப் பார்க்கிறார். அவர்கள் இறைவன் மீது கொண்ட அன்பின் பெருக்கால் உடல் முழுவதும் கம்பித்து நிற்கிறார்கள். கம்பித்தல் என்பது வியப்புத்தரும் காட்சியைக் கண்டவுடன் உடல்முழுவதும் ஒரு குளிர்மை பரவல். அதனால் கூடவே ஓர் அழுகையும் தோன்றும். இந்த வியப்பு நிலையை இறைவனைக் கண்ட போது மணிவாசகர் நன்குணரவில்லை. அவர் புதிய ஒரு குருவையே கண்டார். எனினும் இறைவன் மெய்யடியாரோடு தனக்கும் திருவடித்தீட்சை தந்த அருளை எண்ணும் போது இறையருளை உணர்கிறார். அடியாருடன் ஆர்த்து வைத்து ஆட்கொண்டமை அவருக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது.

தன்னை தன் கூடா ஒழுக்கத்தால் ஏற்பட்ட அழுக்கண மனத்தைத் தூய்மையாக்கியதே அவ்வருள் எனக்கூறுகிறார். என்னைக்கழுமணியே எனவிளித்து நின்னைப் பிரிந்து வருந்துகின்ற எனக்கு நின்னுடைய புலன் கழலை மீண்டும் காட்டியருள வேண்டுமென இரந்து நிற்கிறார். கழுமணி என்பது தூய்மையான ஞானத்தைப் புகட்டும் ஆசிரியரைக் குறித்து நின்றது இறைவன் குருவடிவாக வந்து தனது பாச வழுக்கை நீக்கியமையையே அவர் "என்னைக் கழுமணியே" என்ற தொடர் மூலம் விளக்கியுள்ளார். புலன்கழல் இறைவ னது ஞானமாகிய திருவடியாகும். இறைவனது ஞானமாகிய திருவடித் தீட்சை பெற்றும் அவரால் மனப் பக்குவத்துடன் பக்தி வாழ்வியல் நடத்த முடியவில்லை. அவர் மனம் இடையில் இளமாதர் பாற் சென்று விடுகிறது. எனவே இன்னும் ஒரு முறை என் ஐம்புலன் நுகர்ச்சியைக் கெடுக்க நின்னுடைய திருவடி தீட்சையை நான் பெறவேண்டும் எனக் கேட்டு நிற்கிறார். இன்னும் மணிவாசகரைப் போல மனப்பக்குவம் அடையாத பல ஆண்கள் உளர். அவர்களுக்கு இது ஒரு அறிவுறுத்தலாக அமையும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

கொழுமணியேர் நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்று குன்றி
விழுமடியேனை விடுதி கண்டாய்
மெய் முழுதுங் கம்பித்
தழுமடியாரிடை யார்த்துவைத்
தாட்கொண்டருளி யென்னைக்
கழுமணியே யின்னுங் காட்டு
கண்டாய் நின் புலன் கழலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்தின்போது கிரிக்கெட் வீரர்களுக்கு 'கோட்வேட்'



ஐபிஎல் சூதாட்ட விவகாரம் கிரிக்கெட் உலகையே புரட்டிப்போட்டுள்ளது. 3 கிரிக்கெட் வீரர்கள், பொலிவுட் நடிகர் விண்டு தாராசிங், சென்னை அணியின் கௌரவ உறுப்பினர் மற்றும் 25இற்கும் மேற்பட்ட சூதாட்ட தரகர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது. இதில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளது. பிந்திய விசாரணைகளின்படி சூதாட்டதரகர்கள் கிரிக்கெட் வீரர்களுக்கு 'கோட்வேட்" எனப்படும் இரகசிய பெயர்கள் வைத்தது தெரியவந்துள்ளது.

இந்திய அணியின் வளர்ந்து வரும் நட்சத்திர வீரர் கோலிக்கு ரைசிங் எனவும் அணித் தலைவர் தோனிக்கு அவரின் விருப்பமான ஷொட்டான 'ஹெலிகொப்டர்' என்றும ஹர்பஜனுக்கு டோபி, மலிங்காவிற்கு மாங்கி, கிறிஸ் கெய்லுக்கு ராவன், சேவாக்கிற்கு ஷஸ்மா, ரெய்னாவிற்கு ஷேர், ஸ்ரீசாந்திற்கு ரோட்டு, யுவராஜ்சிங்கிற்கு மாடல், அஸ்வினுக்கு பிர்கி எனவும் புக்கிகள் பெயர் வைத்து சூதாட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## இங்கிலாந்து ஆடுகளங்கள்

# சவாலாக இருக்கும்

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை அணிக்கு இங்கிலாந்தின் கள நிலைமைகளே சவாலாக அமையும் என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார். சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்காக இங்கிலாந்திற்குச் சென்றுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளில் மிகச்சிறப்பான திறமையை வெளிப்படுத்தியிருக்காத போதிலும், அது தொடர்பான வருத்தம் கிடையாது எனவும், இலங்கையின் சிரேஷ்ட வீரர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை காணப்படுவதாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்தார்.

இலங்கை வீரர்களில்



பெரும்பாலானோர் இந்தியாவின் மெதுவான ஆடுகளங்களில் அண்மையில் ஆடிவிட்டு, இங்கிலாந்தின் வேகமான, வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான ஆடுகளங்களில் ஆட வேண்டிய நிலை காணப்படுகிறது.

ஆகவே இங்கிலாந்து ஆடுகளங்களுக்கு ஏற்றவாறு தங்களை மிகக் குறுகிய காலத்தில் மாற்றிக்கொள்வதே இலங்கை அணிக்கு சவாலானதாகக் காணப்படும் எனத் தெரிவித்த அஞ்சலோ மத்தியூஸ், இலங்கையின் பந்துவீச்சாளர்களான லசித் மலிங்க, நுவான் குலசேகர, திஸர பெரேரா ஆகியோர் இங்கிலாந்து ஆடுகளங்களில் மிகச்சிறப்பாகச் செயற்படுவர் என அஞ்சலோ மத்தியூஸ் எதிர்பார்ப்பை வெளியிட்டார்.

| | | |
|---|---|---|
| ஜூன் 1 | இந்தியா - இலங்கை | மாலை 3 மணி |
| ஜூன் 1 | அவுஸ்திரேலியா - மே.இ.தீ | மாலை 5.30 மணி |
| ஜூன் 3 | பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா | மாலை 3 மணி |
| ஜூன் 4 | இந்தியா - அவுஸ்திரேலியா | மாலை 3 மணி |
| ஜூன் 4 | இலங்கை - மே.இ.தீ | மாலை 3 மணி |

மினி உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பாக இடம்பெறவுள்ள பயிற்சி ஆட்டங்கள்



ராஜீவ் சுக்லா

# தலைமை வேண்டாம்

## - ஒதுங்குகிறார் ராஜீவ் சுக்லா

ஐபிஎல் அமைப்புக்கு மீண்டும் தலைவராக இருக்க விருப்பம் இல்லை என்று அந்த அமைப்பின் தற்போதைய தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த ஆறாவது ஐபிஎல் போட்டியில் எப்போதும் இல்லாத அளவுக்கு சூதாட்டம் நடைபெற்றது. இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக ஸ்ரீசாந்த் உள்ளிட்ட 3 கிரிக்கெட் வீரர்கள், சூதாட்டக்காரர்கள் என பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால், அதிக பணம் புழங்கும் ஐபிஎல் போட்டியை தொடர்ந்து நடத்தக் கூடாது என்று பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வரும் வேளையில் ராஜீவ் சுக்லா இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்,

ஐபிஎல் அமைப்பின் தலைவர் பதவி ஓராண்டு. ஒவ்வொரு ஆண்டும் இது புதுப்பிக்கப்படும். தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இப்பதவியை வகிக்க விரும்பவில்லை.ஐபிஎல் போட்டி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டாலும், மைதானங்கள் நிரம்பி வழிந்தன. எப்பதவிக்கும் நான் ஆசை கொள்ளவில்லை., ஐபிஎல் தலைவர் பதவி எனக்கு அளிக்கப்பட்டபோது, அதை ஏற்று என்னால் முடிந்த அளவு சிறப்பாகப் பணியாற்றியுள்ளேன். பிசிசிஐ தலைவர் சீனிவாசன், அப்பதவியில் தொடர்வது குறித்து கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் ஆலோசித்து வருகின்றனர். எங்களது பிரதான நோக்கம், பிசிசிஐ மற்றும் இந்திய கிரிக்கெட்டின் மாண்பைக் காப்பதுதான். ஒரு சிலரின் நடத்தையால், ஐபிஎல் போட்டியின் மதிப்பு எவ்விதத்திலும் குறையவில்லை. சூதாட்டக்காரர்களை சட்டத்தின் மூலம் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இதுபோன்ற குற்றச்சாட்டில் ஈடுபடும் வீரரை, குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

**சீனிவாசன் விலகவேண்டும**

சூதாட்டம் தொடர்பாக விசாரிக்க 3 நபர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணை நேர்மையாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில், சீனிவாசன் தனது பதவியை விட்டு விலக வேண்டும். இது எங்களது ஆலோசனை தான். இது குறித்து அவரே இறுதி முடிவு எடுப்பார் என்று சுக்லா கூறியுள்ளார்.

கிரிக்கெட் சபையின் மூத்த உறுப்பினர் ஜோதிராதித்யா சிந்தியா, பிசிசிஐயின் துணைத் தலைவர் அருண் ஜேட்லியைத் தொடர்ந்து தற்போது சுக்லாவும் சீனிவாசன் விலக வேண்டும் என்று கூறியுள்ளது அவருக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# மௌனம் கலைத்தார் சர்ச்சையில் சிக்கிய பாகிஸ்தான் நடுவர்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 13 ஆட்டங்களுக்கு நடுவராக பணியாற்றிய பாகிஸ்தானை சேர்ந்த சர்வதேச நடுவர் 57 வயதான ஆசாத் ரவுப் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்தமையால் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கான நடுவர் பணியில் இருந்து அதிரடியாக விலக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டியை முடித்துக் கொண்டு பாகிஸ்தான் திரும்பிய அவர், தனது மௌனத்தை கலைத்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) அனுமதியுடன் லாகூரில் நிருபர்களை சந்தித்த ஆசாத் ரவுப் சூதாட்ட சர்ச்சை தொடர்பாக கருத்துவெளியிடும்போது,

சூதாட்ட தரகர்களிடம் இருந்து பரிசு பெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள், சட்டத்திற்கு புறம்பாக பணம் வாங்கியதான புகார் அனைத்தையும் நான் கடுமையாக மறுக்கிறேன். இவையெல்லாம் ஒரு போதும் எனது இலக்காக இருந்ததில்லை. எனது வாழ்க்கையில் அவற்றுக்கு இடமும் இல்லை. என் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை.

ஐ.சி.சி. ஊழல் தடுப்பு குழு மற்றும் பாதுகாப்பு குழுவினர் என்னிடம் விசாரணை நடத்த விரும்பினால், அதை சந்தோஷமாக எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன்.

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் மட்டுமே ஐ.சி.சி. என்னை விலக்கியுள்ளது. ஆனால் சர்வதேச நடுவர்கள் அடங்கிய குழுவில் இருந்து என்னை நீக்கவில்லை. கிரிக்கெட் போட்டி மற்றும் எனது நலன் கருதி ஐ.சி.சி. எடுத்த இந்த முடிவை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது போன்ற சூழலில் அந்த போட்டிக்கு நான் நடுவராக இருந்தால், அதனால் கவனம் சிதறக்கூடும். எனவே ஐ.சி.சி. எடுத்த முடிவு எனக்கு திருப்தி தான். இவ்வாறு ஆசாத் ரவுப் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்க தருணத்தில் பதிலளிப்பேன்

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக முன்னணி வீரர்கள், தரகர்கள், முக்கிய பிரமுகர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. சூதாட்ட சர்ச்சையில் சிக்கிய சில அணிகளும் பொலிஸ் விசாரணை வளையத்தில் உள்ளன.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் சம்பியன்ஸ் கோப்பை தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி நேற்று இங்கிலாந்து சென்றது. அங்கு பர்மிங்காம் நகரில் தோனி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, இந்தியாவில் உள்ள சூதாட்ட விவகாரம் பற்றி நிருபர்கள கேட்டனர். இதற்கு பதில் அளிக்க மறுத்த தோனி, சரியான நேரத்தில் பதில் அளிப்பேன் என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "சம்பியன்ஸ் கோப்பை தொடர் எங்களுக்கு மிகவும் முக்கியமான தொடர் என்பதால், இப்போது அதில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். எனவே, ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பான எந்த கேள்வியையும் கேட்க வேண்டாம். சரியான நேரத்தில் மட்டுமே அதற்கு பதில் அளிப்பேன்.

இந்த குறிப்பிட்ட முறைகேடு இநதியாவின் புகழையோ, கிரிக்கெட்டின் புகழையோ பாதிக்கப் போவதில்லை. இந்திய கிரிக்கெட்டின் நற்பெயரும் பாதிக்கப்படவில்லை. வரும் தொடரில் இந்தியா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும்.



அதேசமயம் சம்பியன்ஸ் கோப்பை தொடரில் எங்கள் அணி சிறப்பாக விளையாடாவிட்டால், ஐ.பி.எல். போட்டியை குற்றம் சாட்ட முடியாது" என்றார்

# சங்கானை ஞானவைரவர் வி.க துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தினால் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் அணிக்கு 7 பேர் கொண்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 7 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல்முறையிலான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ளவிருக்கும் விளையாட்டு கழகங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு ஞானவைரவர் விளையாட்டுக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேற்படி துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ளவிருக்கும் விளையாட்டுக் கழக அணிகள் எதிர் வரும் 5-ம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவினை மேற்கொள்ள விரும்புவோர் 0779600947, 0778999266 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ள முடியும்.

இத்துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி கிண்ணத்தை சுவீகரித்துக் கொள்ளும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப் பரிசு வழங்கப்படவுள்ளதோடு, பங்குபற்றும் அனைத்துக் கழகங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (5)

# விடுதலையை வென்றெடுப்பதற்கான...

எனவும் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளருடனான சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் பல நாடுகளுடைய விடுதலைப் போராட்டங்கள் பற்றி புத்தகங்களில் படித்துள்ளேன். இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தினை என்னால் நியாயப்படுத்திக் கொள்ளக்கூடியதாக உள்ளது. அப் போராட்டத்தின் மூலம் எமது தமிழ் இனம் விடுதலை பெறும என்ற கருத்தும் என்னிடம் இருந்தது. அப் போராட்டத்தில் நான் எவ்வளவு தூரம் ஈடுபாடு கொண்டிருந்தேன் என்று பேசுவது தற்போது பொருத்த மற்றதாகத்தான் இருக்கும்.

ஆனால் அந்த விடுதலைப் போராட்டம் சர்வதேச அரசியல் இராஜதந்திர அணுகுமுறையில் போதியளவு அக்கறை காட்டாமையே அதனுடைய முக்கிய குறைபாடாக இருக்க முடியும். அவ்வாறான ஒரு அணுகுமுறை இருந்திருந்தால் இந்தப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் வெற்றிபெற்றிருக்கும். ஜனநாயக ரீதியில் செயற்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் வரலாற்றுத் தவறு ஒன்றினை விட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தில் புரிந்துணர்வு அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு அப்போது ஆதரவு வழங்கி இருந்தனர். இது மறுக்க முடியாத உண்மை.

2002,2003 ஆம் ஆண்டுகளில கூட தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச அளவில் முக்கியத்துவம் இருந்த போதும், போர்நிறுத்தம் மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போதுகூட நாங்களும் மிக நெருக்கமாக இருந்திருக்கின்றோம். 2002,2004 ஆம ஆண்டுத் தேர்தல் காலங்களிலும் கிளிநொச்சிக்கு சென்று அவர்களுடன் புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்ளக கூடிய சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைத்தது.

ஆனால் நாங்கள் யாரும் எதிர்பாராத விதமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம அறிவித்திருந்தது. மிக நீண்ட வரலாற்றினைக் கொண்ட இந்த நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பில் அரசு சரியான முறையில் மதிப்பீடு செய்திருந்தால் இவ்வாறான போராட்டங்கள் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த தமிழர்கள் தங்களுடைய தாயகப் பிரதேசத்தில் தங்களைத் தாங்களே ஆளுகின்ற தன்னாட்சி உரிமைக்காக பதில் போர் முடிபடைந்த பின்னாவது கிடைத்திருக்கும்.

ஆனால் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம் என்று வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்திக் கொண்டு, இப் போராட்டங்கள் நடைபெறுவதற்குப் பின்னால் உள்ள காரணியான அரசியல் பிரச்சினை தீர்வைக் காணாமல், அரசாங்கம் தொடர்ந்து தமிழ் மக்களுடைய குரல், ஜனநாயக குரல், தங்கள் பிரதேசத்தில் தங்களை தாங்களே ஆளுகின்ற தத்துவத்தைக் கொண்டிருக்கும் அந்தக் குரல்களை அடக்கி ஒடுக்கி இனிமேல் அந்த குரல்கள் எழக் கூடாது என்ற சிந்தனையும், சித்தாந்தமும் உள்ளவர்களாகவும், அந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தமது செயற் பாடுகளை முன்னெடுப்பவர்களாகவும் உள்ளனர்.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எங்கள் மண்ணில் நாங்கள் ஆள்வதற்கு ஜனநாயக ரீதியில் போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள், உடன்பாடுகள் இடம்பெற்ற போதும் இவற்றை எல்லாம் மதிக்காமல், இப்படி ஒரு இனம் இல்லை என்றும் அல்லது அவ்வாறு இருந்தாலும் அவர்களுக்கு உரிமை தேவை என்பதை நிராகரிக்கின்ற ரீதியில் தான் இந்த அரசாங்கம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதனை நாங்கள் சர்வதேசத்திற்கும் சொல்லியுள்ளோம்.

தங்களுடைய நாட்டிலேயே யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் மக்கள் இன்னும் முகாம்களிலும், தற்காலிக இடங்களிலும் தங்கியுள்ளனர்.

ஐ.நாவின் அறிக்கையின்படி தென்னிந்தியாவில் மட்டும் கடந்த 22 வருடங்களாக 80 ஆயிரம் மக்கள் இலங்கை அகதிகளாக உள்ளனர். இதனைவிட அவர்களுடைய இயற்கை பிறப்புவீதம் இன்னமும் அதிகமானவர்களை கொண்டுள்ளது. இன்னமும் முழுமையாக மதிப்பீடுகள் வெளியிடப்படவில்லை ஆயினும் சுமார் ஒன்றரை இலட்சம மக்கள் இன்னம் தென்னிந்தியாவில இருந்து இலங்கைக்கு வரவேண்டியவர்கள் உள்ளனர்.

இன்று கலைஞர் கருணாநிதியும் அங்குள்ள கட்சிகளும் எங்களுடைய குடிப்பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கருத்தில் கொள்ளாமல் அங்குள்ள மக்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று கூறுவது, தற்கால சூழலை அவர்கள் உரிய முறையில் விளங்கிக் கொளளாமையே காரணம். இது எமக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்துகின்றது.

உள்நாட்டில் உள்ள அகதிகளும், வெளிநாட்டில் உள்ள அகதிகளும் தங்களுடைய் சொந்த நிலங்களுக்குச் செல்ல முடியாமல் இருப்பது அவர்களுடைய உறுதிக்காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதால் தான்.

எனவே இராணுவத்தினர் மக்களுடைய காணிகளை விட்டு வெளியேறி மீள்குடியேற்றத்திற்கு வழிவிட வேண்டும் என்று நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# கச்சதீவுக்கு அருகில்...

கச்சதீவு அருகே இலங்கைப் போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக மீன்பிடிக்கச் சென்று திரும்பிய தமிழ்நாட்டுப் படகு மீனவர்கள் கூறியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 45 நாட்களாக இருந்த மீன்பிடித் தடைக்காலம் நேற்று முன்தினம் மே 29ம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், இராமேஸ்வரத்தைத் தவிர்த்த மற்ற பகுதி மீனவர்கள் நேற்றே கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

ஆனால் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் நாளை சனிக்கிழமை தான் மீன்பிடிக்கச் செல்கின்றனர். இந்த நிலையில், நேற்று மீன்பிடிக்க நாட்டுப் படகில் கடலுக்குச் சென்ற தங்கச்சி மடம் மீனவர்கள் சிலர் கரை திரும்பிய பின்னர் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவம் கச்சதீவு அருகே 4 போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது. மேலும், 5 சிறிய ரோந்துக் கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன. கச்சதீவு பகுதியைச் சுற்றி மிதவை பலூன்கள் அதிகம் வைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக விசைப்படகு மீனவர்கள் இரட்டை மடி வலை உள்ளிட்ட தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவர் என்பதால் அதிகம் கண்காணிப்பார்கள், அவர்களை இலங்கை இராணுவத்தினர் அடித்து விரட்டுவார்கள். ஆனால், நாட்டுப் படகு மீன்வர்களை பெரிதும் தடை செய்வதில்லை. ஆனால், இந்த முறை நாட்டுப் படகு மீனவர்களையும் இனிமேல் இங்கே மீன் பிடிக்க வரக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினார்கள் என்றனர்.

இந்தத் தகவல் இராமேஸ்வரம் பகுதி மீனவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. 45 நாட்கள் தடைக்காலம் முடிந்து கடலுக்குச் செல்லும் இந்த நேரத்தில், கச்சதீவு பகுதியில் இலங்கை இராணுவம் போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ள செயல் பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாக மீனவர்கள் கூறியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# தாய்லாந்து...

குறித்து கலந்துரையாடவுள்ளார்.

பாராளுமன்றத்துக்குச் செல்லும் அவர் பிற்பகல் 2.45 மணிக்கு பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்யும் தாய்லாந்து பிரதமர் அங்கு தலதா மாளிகையின் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசிபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இந்.புலனாய்வு...

அதிகாரிகளுக்கும் வன்னி கட்டளைத் தளபதிக்கும் இடையில் கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, வன்னி வாழ் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கமும் பாதுகாப்புப் படைகளும் முன்னெடுத்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தல் மற்றும் இந்திய உதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டம் தொடர்பான விளக்கங்கள் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11,250)

# ஜயலத் இடத்...

கம்பஹா மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவின் இடத்திற்கு அஜித் மன்னப்பெருமவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# காணி சுவீ...

சுவீகரிப்பதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்படுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதிவாதிகளின் இந்த செயற்பாட்டினை தடுத்து நிறுத்துவதற்கான மனுக்கள் மீதான விசாரணை நிறைவுபெறும் வரை இடைக்கால தடையுத்தரவொன்றை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மேன்முறையீடு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இந்த வேண்டுகோள் தொடர்பில் தீர்ப்பு வழங்குவது குறித்து பின்னர் அறிவிப்பதாக நீதிமன்றம் இதன் போது அறிவித்துள்ளது. (எ-11)

# ஜயலத் எம்.பி...

ஜயலத் ஜயவர்தன சில காலமாக சிகிச்சை பெற்று வந்தார்.

சிங்கப்பூர் மருத்துவமனை ஒன்றில் ஜயலத் ஜயவர்தனவிற்கு சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொளளப்பட்டதாகவும், இதன்போதே அவர் நேற்று அதிகாலை உயிரிழந்ததாகவும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி வட்டாரங்களும் அவரது மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளன.

ஏற்கெனவே அவர் மாரடைப்பு காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிகபட்டு சிகிச்சைப் பெற்றதன் பின்னர் வீடு திரும்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1953ம் ஆண்டில் பிறந்த ஜயலத் ஜெயவர்தன 1994ம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு தெரிவான அவர், 2002-ம் ஆண்டு முதல் 2004-ம் ஆண்டு வரையில் புனர்வாழ்வுத்துறை அமைச்சராக பணியாற்றி இருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி பதவி வகித்த காலங்களில் டாக்டர் ஜயலத் ஜயவர்தன மிக முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்த காலப் பகுதியில, தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் அதிக அளவில் பேசியுள்ளார்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பல்வேறு கட்ட சமாதான பேச்சுவார்த்தைகளிலும் ஜயலத் ஜயவர்தன பங்கேறறிருந்தார்.

அத்துடன், சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அடிக்கடி சந்தித்து வந்தமையும், அது சார்ந்த போராட்டங்களில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# நேர்த்திக்கடன் முடிக்க...

அவரை மேல் விசாரணைக்காக உடனடியாகக் கொழும்புக்குக் கொண்டு செல்வதாகவும் சனிக்கிழமை வந்து அவரைப் பார்வையிடலாம் என்றும் கூறியதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 39 வயதுடைய மயில்வாகனம் கணேசரூபன் என்றும், நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் பிரித்தானிய பிரஜை என்றும் 18 வருடங்களின் பின்னர் தாயகத்திற்கு அதுவும் ஆலய நேர்த்திக் கடனை செலுத்துவதற்காக வந்து, அடுத்த வாரமே தாங்கள் லண்டன் திரும்பிச் செல்லவிருந்த வேளையிலேயே, இவ்வாறு தனது கணவன கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவருடைய மனைவி சுகந்தினி தெரிவித்தார்.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறையிட்டிருப்பதுடன், பிரித்தானிய அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் கூறினார். (எ-11)

ENGLISH
THE EASY WAY
Modern 5 Way Approach to English Language Learning
இலகுவழி ஆங்கில கற்கைநெறி
By: S.Muththulingam
சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00
செவ், வியா மாலை 3.00 - 5.00
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 222 0011
முதல் வகுப்பு இலவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு உண்டு

334, நாவலர் வீதியில்
கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0756676328

(2890)

## புதுவீடு விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி பகுதியில் அழகிய
புதிய வீடு சகல வசதிகளுடனும்
விற்பனைக்குண்டு.
(முழுவதும் மாபிள் பதிக்கப்பட்டது)

தொடர்பு : 0773273125

(2866)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1540
E-mail: valampuri@yahoo.com

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செய...

### சரா புவனேஸ்வரன் அவர்களின்
### பொன்விழா நிகழ்வும்
### சயன்ஸ் அக்கடமி மாணவர் கௌரவிப்பும்
### வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் நூல் வெளி...

50 Years Golden Jubilee

காலம் : 01.06.2013 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகம்

தலைமை
திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ்
தலைவர், சரா பொன்விழாச் சபை

பிரதம விருந்தினர்
பேராசிரியர் க. தேவராஜா அவர்கள்
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

சிறப்பு விருந்தினர்கள்
உயர்திரு. கு. பிறேமகாந்தன் அவர்கள்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்
உயர்திரு. A. J. குருஸ் அவர்கள்
வலயக்கல்விப்பணிப்பாளர், மடு கல்வி வலயம்.
திருமதி சிவத்திரை சிவநாதன் அவர்கள்
பிரதிக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்.
Dr. லயன் வை. தியாகராஜா அவர்கள்
மாவட்ட பிரதம இணைப்பாளர், சர்வதேச லயன்ஸ் கழகம்.

கௌரவ விருந்தினர்கள்
உயர்திரு. V.T. சகாதேவராஜா அவர்கள்
தலைவர், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்.
தொழிலதிபர் E.S.P. நாகரத்தினம் அவர்கள்
முகாமைத்துவப் பணிப்பாளர், E.S.P கூட்டு நிறுவனம்.

- சரா பொன்விழாச் ச...

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

| | |
|---|---|
| **Spoken English With Grammar - Quick Learning Course**<br>குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது. | **Diploma / Advanced Diploma in English**<br>ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும். |
| **IELTS - British Council**<br>**B1 - Exam City & Guilds**<br>Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது. | **A1 Exam - Sponsor/Settlement Visa**<br>மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை |

(C-3466)

**Young Learners for English (YLE)**
வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch I - 01.06.2013 Batch II - 03.06.2013 Batch III - 08.06.2013 Batch IV - 10.06.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road,
Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிர...
## பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுகள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பா...
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 07729...

## யாழ்ப்பாணத்தில் 17.08.2013 இல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்

# IELTS

BRITISH COUNCIL

We are "IELTS Registration Center for British Council"



* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

**வகுப்புக்கள் - 01.06.2013 ஆரம்பம்**

Weekend Sat & Sun 8.30 - 12.00

| Weekdays | Course duration | Course fee |
|---|---|---|
| Mou - Tues - Wed - Thurs | 4.30 - 6.30<br>60 hours | Rs.15,000/= |

For registration and further details contact

## CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887

இந்திய சமையற்கலை வல்லுநர்களால்
விசேடமாக தயாரிக்கப்பட்ட
உணவு வகைகள் வேண்டிய அளவு
(Buffet) புஃவே முறையில்
ஜூன் 1,2 ஆம் திகதி சனி, ஞாயிறு
ஆகிய இத்தினங்களில் மாலை 6 மணி
தொடக்கம் இரவு 10 மணிவரை உண்டு
மகிழ நாட வேண்டிய இடம்,

முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரெஸ்ரோரன்...

# பிள்ளையார் இன்...

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண...

விசேட விலைக் கழிவு
**200 ரூபா மட்டுமே...!**

உணவு வகைகள், பூரி, பாஜி உட்பட
பல வகையான தோசை வகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 0778959716**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்...